# ஆரம்பக்கல்வி
## ELEMENTARY EDUCATION

'ஆரம்பக் கல்வி''யின் முன்னேற்றத்திற்காக உழைக்கும் ஓர் மாதாந்திர பத்திரிகை:

EDITOR.
P. VEERARAGHAVAN (Member, Madras District Educational Council)


"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு" திருவள்ளுவர்.

# டைரக்டரே ஹிட்லர்.

## கல்விச் சபைகள் தலையாட்டிச் சபைகளாக இருக்கவேண்டுமோம்!

தோட்டி முதல் தொண்டமான் வரையில் சுதந்தரம் வேண்டுமென்று போராடும் இக் காலத்தில், நமது கல்வி மந்திரி கனம் முத்தையா செட்டியார், ஜெர்மனியில் ஹிட்லருக்கு சர்வாதிகாரம் மக்கள் அளித்திருப்பது போல், கல்வி யிலாகாவில் சர்வாதிகாரத்தையும் கல்வி யிலாகா டைரக்டர் துரையவர்களுக்கும் அவர் சகாக்களுக்கும் அளித்துவிட்டார். ஆதலின் இனி ஆரம்பக் கல்வி நமது நாட்டில் சீக்கிரம் பரவிவிடும். திரு. குமாரசாமி ரெட்டியார், டைரக்டருக்கு விருப்ப மில்லாத கல்விச் சபைகள் செய்யும் தீர்மானங்களை, ரத்து செய்யும்படி ஒரு புதிய அதிகாரத்தைக் கொடுத்தார். ஆனால் டைரக்டர் ரத்து செய்தாலும், கல்விச் சபைகள் கவர்ன்மெண்டுக்கு அப்பீல் [illegible] சட்ட மேற்படுத்தினர். [illegible] கல்வியிலாகாவுக்கு [illegible] அதிகாரம் சிவபிரான் [illegible] கொடுத்த மாதிரிதான்.

"The recommendation of the District Educational Officer or the Inspectress, as the case may be, shall be subject to the orders of the District Educational Council which may, after considering the report, if any, sent by, or called for from the Inspecting officer or making such enquiry as it thinks fit, determine the amount of increase or reduction in the assessed grant:

Provided further that no increase in the assessed grant shall be sanctioned for a school for which a reduction in such grant is recommended by the District Educational Officer or the Inspectress, as the case may be:"

"An efficient school shall be a school which has not been recommended by the D. E. O. or Inspectress of girls school as a the case may be, for anyreduction in grant for any reason what so ever"

ஜில்[illegible] பதிகாரி தனக்கு பிடிக்காத பாடசா[illegible]க்கு [Reduction] [illegible]ரான்டை குறை[illegible]


T15 ௱ 2ll, ௲33
N36 · 4 · 6-7
19034b

என்று எழுதிவிட்டால் அப்பாடசாலைக்குக் கல்விச் சபை (Increase) அதிகப்படியாக கிராண்டைக் கொடுக்க அதிகாரம் கிடையாது. அவ்விதம் குறைந்தது நியாயமா, அநியாயமாவென்று கேட்க எவருக்கும் அதிகாரம் கிடையாது. பொது மக்களால் தேர்ந்தெடுத்தனுப்பப்பட்ட கல்வி மந்திரிக்குக்கூட அதிகாரம் இருக்கிறதோ இல்லையோ என்று சந்தேகமாகத்தான் இருக்கின்றது. சர்வ அதிகாரமும் டைரக்டருக்குத்தான். டைரக்டரும் அவர் சகாக்களும் கடைக்கண்ணால் பார்த்தால்தான் பாடசாலைகளுக்கு கதிமோக்ஷம். டிபார்ட்மெண்ட் செய்வதை நல்லதோ, கெட்டதோ ஆசிரியர்களோ, ஆசிரிய மானேஜர்களோ வாய்திறக்கக் கூடாது. திறந்தால் வந்தது ஆபத்து. வாய் திறந்த பாடசாலையை உடனே கல்வி யதிகாரிகள் பத்மா சூரனைப்போல் அடியோடு அழித்து விடுவார்கள். கொலை செய்தவனுக்குங் கூட ஹைகோர்ட்டில் அபீல் செய்துகொள்ளவும், நியாயமான காரணங்களைக் காட்டி தப்பித்துக் கொள்ளவும் இடமிருக்கின்றது. சகல அதிகாரமுடைய ஸெஷன் ஜட்ஜுங்கூட ஜூரிகள் என்று 9 பொது மக்களை ஏற்படுத்தி, அநேகமாக அவர்கள் அபிப்பிராயங்களை ஒட்டியே தீர்ப்புச் சொல்லுகிறார். ஆனால் நமது டைரக்டருக்குக் கல்விச் சபையும் அதிலுள்ள (Non officials) பொது மக்களையும் கண்டால் ஒரே அருவருப்பு; அதற்கு என்ன காரணமோ தெரியவில்லை. ஆனால் கல்வி யிலாகாவில் தற்போது மந்திரியார் டைரக்டருக்குக் கொடுத்திருக்கும் அதிகாரமோ அப்படியன்று. ஆசிரிய மானேஜர்களோ, ஆசிரியர்களோ தப்பித்துக்கொள்ள வழியே கிடையாது. டைரக்டருக்கும், அவர்கள் சகாக்களுக்கும் அடிமைகளாக இருக்கவேண்டுமாம். போனாலும் போகட்டும் நமது நாடே அடிமையிலிருக்கின்றது. ஆசிரியர்களாகிய நாமும் வேண்டுமானால் இன்னும் 100 வருடங்களுக்கு அடிமைகளாகவே இருக்கவேண்டுமென்று யாருக்கு வேண்டுமானாலும் எழுதிக்கொடுக்கவும் தயாராயிருக்கின்றோம். ஆசிரியர்கள் மீது வேண்டுமானால்இன்னும் 1[illegible]

190346

யோகம் செய்யட்டும் ஆனால் இவர்கள் செய்த புதிய திட்டத்தினால் நமதுநாட்டில்ஆரம்பக் கல்வியை அதிகமாக விருத்திசெய்து, பாமரத்தன்மையை இத்தனை வருடத்தில் ரஷியாவைப் போல் ஒழித்துவிடப் போகிறோமென்ற உறுதியை இப்பொழுது தமக்கு அதிகாரம் வேண்டுமென்று ஆசைப்படும் டைரக்டரோ, இவரை உள்ளங்கையில் தாங்கிப் பிடித்துக்கொண்டிருக்கும் தற்போதுள்ள கல்வி மந்திரியோ ஒரு பொது மக்கள் கூட்டத்தில் தக்க காரணங்களைக் காட்டி நிரூபிப்பார்களானால் இப்பொழுது இவர்கள் ஏற்படுத்தியுள்ள திட்டத்தை நாம் ஆதரிக்கத் தயாராயிருக்கின்றோம்.

இப்பொழுது ஏற்படுத்தியுள்ள திருத்தத்தை வைத்துக்கொண்டு பாடசாலைகள் ரிபோர்ட்டுகளை பரிசீலனை செய்து பார்த்தால், தற்போதுள்ள பாடசாலைகளில் 100-க்கு 60 பாடசாலைகள் திறமையற்ற பாடசாலைகளென்று தீர்மானிக்க வேண்டியிருக்கிறது. அதன்படி எல்லாப் பாடசாலைகளுக்கும் கிராண்டு அடுத்த வருஷம் குறைத்துவிட வேண்டியது தான். இவ்விதம் எய்டட் பாடசாலைகளுக்குத் திரவிய சகாயம் குறைக்கும் முறைகளை கவர்ன்மெண்டார் கையாளுவதினால் ஆரம்பக் கல்வி எவ்விதம் விருத்தியாகுமென்று நமக்கு விளங்கவில்லை. ஏற்கனவே லக்ஷக்கணக்கான பிள்ளைகள் நமது இராஜதானியில் பாடசாலைக்குப் போகாமல் பாமரராக இருந்து வருகிறார்கள். எய்டட் பாடசாலைகளுக்கு உபத்திரவம் அதிகரித்துப் பணம் குறையுமானால் நன்றாக நடக்கும் பாடசாலைகளெல்லாம், திறமையற்றுப் போவதுடன் நாளடைவில் பல பாடசாலைகள் மூடப்பட்டுவிடும். அதன் பலன் நமது நாட்டின் பாமரத்தன்மை குறையவே வழிகிடையாது. நமது நாட்டில் மக்கள் இன்னும் அதிகமாக அடிமைத்தனத்தில் மூழ்கவேண்டியது தான்.

ஆதலின் பல ஜில்லாக்களிலுள்ள ஆசிரியர் சங்கங்களும், ஆசிரிய மானேஜர்களும், மகாநாடுகளைக் கூட்டி, தீர்மானங்களைச் செய்வதோடு நில்லாமல், ஜில்லாக்களிலுள்ள சட்டசபை அங்கத்தினர்களைக் கொண்டு, சராமாரியான கேள்விகளையும், தீர்மானங்களையும் சட்ட



சபையில் கிளப்பி, உடனே ஆசிரியர்களும், மானேஜர்களும், டைரக்டரும், கல்வி மந்திரியும், இன்னும் கல்வியில் தேர்ந்த சட்டசபை அங்கத்தினர்களும் கலந்த ஒரு கமிட்டி ஏற்படுத்தி ஆரம்பக் கல்விச் சட்டத்தை உடனே திருத்தி யமைத்து, திரு. பாத்ரோ, டாக்டர் சுப்பராயன் காலங்களில் இருந்ததைப் போல் பொது மக்கள் நிறைந்த கல்விச் சபைகளுக்கு சர்வ அதிகாரங்களையும் கொடுத்து அதிக ஆசிரியர்களையும் இக் கல்விச் சபைகளில் பிரதிநிதித்துவம் கொடுத்து நமது நாட்டில் பொது ஜனக் கல்வியைப்பரப்பி, பாமரத்தன்மை நமது நாட்டினின்று சீக்கிரம் ஒழியும்படியான வழியைத்தேடும்படியாக கேட்டுக்கொள்ளுகிறோம்.

# கேள்விகளும் குறிப்புக்களும்

இந்த ஆரம்பக் கல்விச் சட்டத்திருத்தத்தைப்பற்றி பல ஜில்லாக்களிலிருந்தும், பல கேள்விகள் அனுப்பப்பட்டிருக்கின்றன. சிலவற்றை மாத்திரம் பெயர்களைக் குறிப்பிடாமல் பொதுவாகப் பலருக்கும் உபயோகமாகும்படி, எமக்குத் தெரிந்த மட்டில் பதிலளிக்கின்றோம்

1. 4, 5-வது வகுப்புக்களில் முதல் வகுப்பிலுள்ள பிள்ளைகளுக்கு 100-க்கு 25-க்குக் குறைந்து ரோலில் இருந்தால் 100-க்கு 10-ம், 15 மாக கிராண்டு பிடிக்கவேண்டுமென்று புதிய சட்டத் திருத்தம் அமுலுக்கு வந்திருக்கிறதே அதனால் எவ்வளவு பாடசாலைகள் பாதிக்கப்படும்? அந்த உத்தரவு எந்தத் தேதியிலிருந்து அமுலுக்குவருகிறது?.

சென்னையைப் பொருத்தமட்டில் இப்புதிய திட்டத்தை அனுசரித்துப் பாடசாலைகளின் ரிபோர்ட்டுகளைப் பரிசீலனை செய்து பார்த்ததில் அநேகமாக 100-க்கு 60பாடசாலைகளுக்கு அஸெஸ்ட்டு கிராண்டில் [Assessed grant] (Reduction) டிப்டி இன்ஸ்பெக்டர்கள் கிராண்டை குறைக்கவேண்டிவரும், இந்த ரூல்கள் 1937—1938 கிராண்டுக்காக பரீட்சை செய்யப்படும் பாடசாலைகளைப் பாதிக்கும். 1936-37 மார்ச்சு மாதம் கிராண்டு வாங்கும் பாடசாலைகளை இப்புதிய ரூல்கள் எவ்விதத்திலும் பாதிக்காது. மாதாந்தர ரிபோர்டு மாத்திரம் பிப்ரவரி மாதத்திலிருந்து டிப்டி இன்ஸ்பெக்டர்களுக்கு அனுப்பிவிடவேண்டியது. இதற்கென பாரங்கள் 3 அணா ஸ்டாம்பு அனுப்பித்தால் 24 பாரங்கள் "ஆரம்பக் கல்வி" ஆபீஸிலிருந்து அனுப்பப்படும்.

# Disallowance of Teachers

அநேக பாடசாலைகளுக்கு மானேஜர்கள் கிராண்டுக்காக எழுதியனுப்பும் பாரத்தில் குறித்துள்ளபடி (C. Statement)ல் எல்லா உபாத்தியாயர்களுக்கும் கிராண்டு கிடைப்பதில்லை. உபாத்தியாயர்களுக்கும் வருட முழுவதும் சம்பளம் கொடுத்துவிட்டு கிராண்டுக்கு எழுதியனுப்பினால் வருட முடிவில் 3 அல்லது 4 உபாத்தியாயர்களுக்குத் தான் கிராண்டு கிடைக்கும். அதற்குக் காரணம், டிப்டி இன்ஸ்பெக்டர்கள், மானேஜர் சர்ட்டிபிகேட் காட்டவில்லை [No Certificate] என்று எழுதி விடுவார்கள், அல்லது (Superfluous) அதிகப்படியாக உபாத்தியாயர்கள் இருக்கிறார்கள் என்று எழுதி விடுவார்கள். இந்த விஷயம் கடைசிவரையில் மானேஜர்களுக்கு ஒன்றும் தெரியாது. கல்விச் சபைகளுக்கு ரிபோர்ட்டுகள் வந்தபிறகு, மானேஜர்களின் கல்விச் சபைப் பிரதிநிதிகள் மூலம் சில மானேஜர்களுக்குத் தெரியவரும். அதற்குள் D. E. O. குறைந்த கிராண்டுத் தொகையைப் ஜனவரி மாதத்தில் கவர்ன்மெண்டுக்குச் சிபார்சு செய்துவிடுவார். பிறகு ஜில்லாக் கல்விச் சபையில் இப்பாடசாலைகளுக்குக் கிராண்டு உயர்த்த வேண்டிவரும். அதன் காரணமாகப் பாடசாலைகளுக்கு (Prorata Cut] அதிகப்படுகிறது. திரு. பாத்ரோ, டாக்டர் சுப்பராயன் காலங்

களில் கவர்ன்மெண்டார் கிராண்டுத் தொகை எவ்வளவு வேண்டுமென்று கல்விச் சபைகளைக் கேட்டு அதன்படி கொடுத்து வந்தார்கள். அப்பொழுது டிபார்ட் மெண்டாரால் ஏற்படும் குறைபாடுகளை யெல்லாம் கல்விச் சபைகளுக்கு சீர்திருத்திக்கொள்ள இடமிருந்தது. இப்பொழுது கவர்ன்மெண்டார் டைரக்டர் கொடுக்கும் கணக்கையே ஆதாரயாகக் கொண்டு கல்விச் சபைகளுக்கு கடந்த 5, 6, வருடங்களாக கொடுத்துவருவதினால்தான் எய்டட் பாடசாலைகளுக்கு பல இடையூறுகள் ஏற்பட்டிருக்கின்றன.

ஆதலின் டிப்டி இன்ஸ்பெக்டர் சகோதரர்களையும் கேட்டுக் கொள்வது யாதெனில் பாடசாலைகளைப் பரீட்சை செய்யும் பொழுது அந்த ரிபோர்ட்டிலேயே இத்தனை உபாத்தியாயர்களுக்கு இந்தக் காரணத்தினால் கிராண்டு சேர்க்கப்படவில்லை யென்று எழுதிவிட்டால் தங்களுடைய பொருப்பு ஓரளவு குறைவதுடன் மானேஜர்களும் டிப்டி இன்ஸ்பெக்டர்களைக் குறை கூற இடமிராது. மானேஜர்களுக்கு கிராண்டு வேண்டு மென்ற அக்கரையிருந்தால் தக்க சர்ட்டிபிக் கேட்டுகளையோ, வேறு ஆதாரங்களையோ, காட்டி, பெற்றுக்கொள்ளட்டும். இவ்விதம் தற்போது சில டிப்டி இன்ஸ்பெக்டர்களே பாடசாலை ரிபோர்ட்டுகளில் எழுதிவருவதாகத் தெரிகிறது. இத்தகைய ஒரு ரூலை சீக்கிரத்தில் ஆரம்பக் கல்விச் சட்டத்தில் அரசாங்கத்தார் சேர்க்கும்படியாக, சென்னை மாகாண ஆசிரிய மானேஜர்கள் சங்கத்தார் ஊக்கம் எடுத்துக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். அல்லது டைரக்டராவது ஒரு (Proceedings) உத்தரவு சீக்கிரம் கல்வி யதிகாரிகளுக்கு விடுவார்களானால் பாடசாலை மானேஜர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் சௌகரியமாக இருக்கும்.

இந்த சந்தர்ப்பத்தில் பாடசாலை மானேஜர்களுக்கு ஒரு வார்த்தை சொல்லவேண்டியிருக்கிறது. டிப்டி இன்ஸ்பெக்டர்கள் பாடசாலையை பரீட்சை செய்யும் பொழுது எல்லா உபாத்தியாயர்கள் சர்ட்டிபிகேட்டை ஒழுங்காக காட்டி கிராண்டை போடும்படிச் செய்ய வேண்டியது. ஏதாவது சர்ட்டிபிகேட்டுகள் விட்டுப்போயிருந்தால் உடனே அவைகளைக் கண்டு பிடித்து சீக்கிரம் கல்வி யதிகாரிகளின் மூலமாக கிராண்டை சேர்த்து விடும்படி பார்த்துக்கொள்ளவும். பொருப்பு நம்முடையது, கிராண்டு வாங்குபவர்கள் நாமே யொழிய டிப்டி இன்ஸ்பெக்டர்கள் அல்ல.

---

## நமது பத்திரிகை.

நமது பத்திரிகை சந்தாதாரர்களுக்கு அனுப்பத் தயாராயிருந்தும், தபாலாபிஸிலிருந்து புதிய ரிஜிஸ்டர் நெம்பர் சீக்கிரம் வராததினால் பத்திரிகையைத் தாமதமாக அனுப்ப நேரிட்டது. இனிப் பத்திரிகை மாதா மாதம் ஒழுங்காகவரும். இன்னும் சந்தா அனுப்பாத பழைய சந்தா நேயர்கள் சீக்கிரம் சந்தாவை அனுப்பிவைக்கவும்.

மானேஜர்.

---

## சென்னை மாகாண ஆசிரிய மானேஜர்கள் 5-வது மஹாநாடு

இம்மகா நாட்டை 1937ௌ மே மாதத்தில் நடத்தவேண்டு மென்பதாக டிசம்பர் மாதத்தில் நடந்த மேற்படி சங்கத்தின் நிர்வாகக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. ஆதலின் இம் மாகாண சங்கத்தில் இணைக்கப்பட்ட ஜில்லா சங்கக் காரியதரிசிகளும், ரேஞ்சு காரியதரிசிகளும் உடனே தங்கள் சங்கங்களைக் கூட்டி இம்மகா நாட்டை எந்த ஜில்லாவில், எந்த தேதிகளில் எவ்விதம் நடத்த வேண்டுமென்பதையும், இதற்கு அக்கிராசனராக யாரைத் தேர்ந்தெடுக்கவேண்டுமென்பதையும் நன்றாக ஆலோசித்துகீழ்க்கண்ட விலாசத்திற்கு தமது அபிப்பிராயங்களை எழுதும்படி கேட்டுக்கொள்ளுகின்றோம். இன்னும் மாகாண சங்கத்திற்கு செலுத்தவேண்டிய 1936-37 வருடாந்திர கட்டணம் ரூ. 3-0-0 அனுப்பாத சங்கங்கள் உடனே கட்டணத்தைத் தயவு செய்து சீக்கிரம் அனுப்பிவைக்கும்படி கேட்டுக்கொள்ளுகின்றோம்.

K. இராமாநுஜம் பிள்ளை
P. வீரராகவன்
கூட்டுக்காரியதரிசிகள்

ஆபீஸ்:
94-95, புதுத் தெரு,
மண்ணடி, மதறாஸ்.


# ஸி. குமாரசாமி நாயுடு & சன்ஸ்

புத்தக வியாபாரிகள்,
சின்னத்தம்பித் தெரு, மதறாஸ்.

---

எலிமென்டரி பாடசாலைகளுக்கு
நவீன முறையில் எழுதிய பலவகைப்
பாட புத்தகங்களும், லைப்ரெரிக்குகந்த
புத்தகங்களும், ஸ்டேஷனரி வகைகளும்

ஆங்கிலத்திலும் 6" முதல் 9" அங்குல
குறுக்களவு கொண்ட குளோப்புகள்

மனித தேகப்படம்
தமிழ், தெலுங்கு, கன்னடத்திலும்
(செட் 7 வகைப்படங்கள்)

இயற்கை பொருட் படங்களும்
(செட் 47 படங்கள்)

இவ்விடம் கிடைக்கும்.

மதராஸ் யூனிவர்ஸிடி, அண்ணாமலை
யூனிவர்ஸிடிப் பதிப்புகளுக்கு
ஏஜென்டுகள்.

---

இவர்களது
## காக்ஸ்டன் லிதோ ஓர்க்ஸில்
பல கலர்களில் உயர்தர வேலைப்பாடுடன் வால் போஸ்டர்கள்
அச்சடிக்கப்படும்.


OFFICE OF THE REGISTRAR 2 JUN 1937 MADRAS

# FORT ST. GEORGE GAZETTE

## ஆரம்பக் கல்விச் சட்டத் திருத்தம்

G. O. No. 174 (26-1-37)

இச் சட்டத்திருத்தத்தை நமது நவம்பர் மாதத்திய பத்திரிகையில் முழுமையும் பிரசுரித்துள்ளோம். இதை அரசாங்கத்தார் 1937-ம் வருஷம் ஜனவரிமாதம் 26-ம் தேதி பிரசுரமான கெஜட்டில் கீழ்க்கண்ட சில மாறுதல்களையும் சேர்த்து அப்படியே ஊர்ஜ்ஜிதப் படுத்தியிருக்கின்றனர்.

1. B. TEMPORARY RECOGNITION

தற்காலிக அங்கீகாரத்தை ஒருமாதம் என்று இருந்ததை 3 மாத காலமாக மாற்றிவிட்டனர்.

1. C. ASSESSMENT OF GRANT

கிராண்டு அஸெஸ்மெண்டில் ஆவரேஜ் அட்டண்டன்ஸ் 25 என்று ஒரு உபாத்தியாயர் கிராண்டு கொடுப்பதற்கு இருந்ததை 20வதாக மாற்றப்பட்டிருக்கிறது. நான்காவது பிரிவில் ஒரு பாடசாலையில் ஒரு உபாத்தியாயருக்கு ஆவரேஜ் அட்டண்டன்ஸ் 20 விகிதம் கணக்கிட்டு கிராண்டு போடும் பொழுது உபாத்தியாயர்கள் அதிகப்படியாக இருந்தால், அல்லது பாடசாலையிலுள்ள பிரிவுகள் (Sections) களைக் காட்டிலும் உபாத்தியாயர்கள் அதிகமாயிருந்தால் அவ்வுபாத்தியாயர்களை கிராண்டுக்காக தள்ளிவிடும்பொழுது தேர்ச்சி(Less Qualified) குறைந்தவர்களைத்தான் தள்ளவேண்டும் என்ற ஒரு திருத்தம் செய்யப்பட்டிருக்கிறது.

II B & C.

(Assessment Increase Rduction by the Department) கிராண்டு அஸெஸ்மெண்டு, டிபார்ட்மெண்டார் கிராண்டு அதிகப்படுத்தவோ குறைக்கவோ உள்ள அதிகாரம் முதலிய சட்டத்திருத்தங்கள் 1937ஹு மார்ச்சு மாதம் 31-ம் தேதி முதற்கொண்டு அமுலுக்குக் கொண்டுவரப்படும். மற்ற திருத்தங்கள் ஜனவரி 26-ம் தேதியிலிருந்து அமுலுக்குகொண்டுவரப்பட்டிருக்கிறது.

POSTINGS

1. Mr. T. B. Krishnasamy Mudaliyar to officiate as Principal, Ceded District College, Anantapur.

2. Mr. M. Suryanarayana to officiate as D. E. O. Vizagapatam. (21-1-37)

3. Mr. K. Sankara Menon to officiate as Divisional Inspector of schools. Coimbatore as temporary measure. (27-1-37)

4. Mr. D. Namasivayam avl to officiate as D. E. O. Coimbatore (28-1-37)

5. Mr. T. V. Apparsundara Mudaliyar to officiate as D. E. O. Ramnad (22-1-37)

APPOINTMENTS

9-1-37

1. Mr. D. Sadasiva Reddy to act as Divisional Incpector of Schools. Madras North.

2. Mr. G. L. Lobo to act as Divisional Inspector of Schools, Madras South.

3. Mr. R. M. Savur to act as Divisional inspector of schools. Guntur.

4. Mr. C. D. Subramanyam Chetty to act as Divisional Inspecter of schools. Coimbatore.

(G. O. Ms. No. 163, 25-1-37)

1. The constitution of the District Educational Council, Trichinopoly, as now amended will be as follows:—

| Ex-officio members. | Number. |
| --- | --- |
| Collector of Trichinopoly | 1 |
| District Educational Officer, Trichinopoly. | 1 |
| President, District Board, Trichinopoly | 1 |
| To be elected by the undermentioned local bodies and other agencies. | Number. |
| Dirtrict Board, Trichinopoly | 15 |
| Municipal Councils of Trichinopoly, Srirangam and Karur (one each) | 3 |
| Roman Catholic Mission | 1 |
| Wesleyan Mission | 1 |
| S. P. G. Mission | 1 |
| Muslim Library Society and Anjuman-e- Himayuth Islam | 1 |
| District Non-Mission Teacher-Managers Association | 2 |
| To be naminated by Government. | |
| Sub-Assistant Inspectresses of Schools | 2 |
| Women | 2 |
| Mahamadan | 1 |
| Scheduled castes | 1 |


## ஆப்த நண்பன்

நீங்கள் அறியாமையினால் தேக சுகத்தைக் கெடுத்துக் கொண்டு அல்லல்படும் சமயத்தில் உங்களுக்கு ஆப்த நண்பனாக உதவும் எங்களுடைய உலகப் பிரசித்தி பெற்ற

ஆதங்க நிக்ரஹ மாத்திரை

களை உபயோகித்தீர்களா? இல்லையேல் உபயோகித்து உடனே தேக அசதி, மலச்சிக்கல் நரம்புகளின் தளர்ச்சி, பசியின்மை, ஞாபக குறைவு, தாது புஷ்டியின்மைமுதலிய வியாதிகளை நிவர்த்தி செய்துக் கொள்ளுங்கள். 32 மாத்திரைகள் அடங்கிய டப்பி 1-க்கு ரூ. 1-0-0

இனாம்! காம சாஸ்திரம் இனாம்!!

விலாசத்தை தெரிவியுங்கள்.

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,

26, பிராட்வே, : : : : மதராஸ்

## ஹரிதாசர் கைகண்ட அவிழ்தங்கள்

1. "சுக்வா" — சுக்குவானுக்கு மிகவும் கைக்கண்டது; ரிஜிஸ்டர் செய்யப்பட்டது இந்த வியாதிக்கு உலகத்தில் சகல மருந்துகளிலும் இதுவே மிகவும் மேலானது உபயோகித்துப் பார்த்தவர்கள் விளம்பரம் செய்கிறார்கள். .... புட்டி ரூ. 1. 3 புட்டி வாங்கினால் தபால் சார்ஜ் இனாம்

2. க்லோரோசாலினால் — இதுவே ஹரிதாசர் காலரா துளி மருந்து; தவறினதேகிடையாது; அபூர்வமான மருந்து 30—35 வருஷ அனுபவம். வாந்தி, காலரா' பேதி வயிற்றுநோய், இவைகள் விரைவில் நீங்கும். புட்டி ரூபா 1 4 0

3. என்னாத் தைலம். — ஸ்நானத்திற்கு உபயோகித்தால் சகல விதகண் நோய்களும் நீங்கி சிரசு குளிர்ச்சியாய் கண்களிற்கு ஒளி உண்டாகும். ராஜ உருப்புகளிலுள்ள மேகச்சூடு நீங்கும். புட்டி விலை பா 1 4 0

மருந்து காட்லாக் இனாம்.

வாத்திமார்களுக்கும் வைத்தியர்களுக்கு மாத்திரம் ரூ 5, மருந்திற்கு குறையாமல் ஆர்டர் அனுப்பினால் ரூ 1 தள்ளிகொடுக்கப்படும்.

ஆஸ்தமா நீரிழிவு முதலிய வியாதிகளுக்கு

கை கண்ட மருந்துகள், விபரம் காட்லாக் இவைகளுக்கு விலாசம்

DR. H. தேவதாசர் B. A. L. T. M. T. Sc.

தாசர் சித்த வைத்தியசாலை,

தின்னனூர், ஆர். எஸ்.

## கலம்பகம்.

"கிராமப் பாடசாலையை அபிவிருத்தி செய்யாமல் கிராம முன்னேற்றம் நடைபெறுமென்றும், கிராமத்தில் நடைபெற வேண்டிய எவ்வித அபிவிருத்திக்கும் கிராம ஆரம்பப் பாடசாலையே முதல்வாசலாகுமென்றும் கூறினர்.

(ராய் பஹதூர் பட்நாயக் கட்டாக்.)

"தற்போது ஆரம்பப் பாடசாலைகளில் 5-வயதிலிருந்து 10 வயது வரையிலுள்ள பிள்ளைகளுக்கு, 5 வருடங்கள் வரை போதிக்கப்படும் கல்வியை, 2 வருடங்களில் போதிக்கக்கூடுமென, நெல்லூரில் நடந்த ஒரு கூட்டத்தில் தெரிவித்தார்.

டாக்டர். டி குருமூர்த்தி.
M. A. (Hons) Ph. D.

*   *   *

பரீக்ஷைகளினால் (Examinations) ஒருபாடசாலையின் திறமையையும், அல்லது அப்பாடசாலை மாணவர்களுக்கு எவ்வளவு தூரம் உபயோகப்படக்கூடுமெனவும், அல்லது, மாணவர்களுடைய திறமையையும், சொல்லிவிட முடியாது என்பதை நான் ஊர்ஜிதமாகச் சொல்ல முடியும். தற்போதுள்ள எல்லா பரீட்சைகளையும் எடுத்துவிடவேண்டுமென்பதே எனது அபிப்பிராயம்,

V. R. அரங்கநாத முதலியார்
D. E. O. திருச்சி.

*   *   *

அதிக அறிவும், ஆற்றலும் வாய்ந்த பிள்ளைகள், சாதாரணமாக அதிக சௌகரியமும், சுகமும் வாய்ந்த குடும்பங்களிலுள்ள தாய்தந்தையர்களுக்குத்தான் பிறக்கின்றன. அத்தகைய பிள்ளைகள் கிராமங்களைக் காட்டிலும் நகரங்களில்தான் அதிகம்பிறக்கின்றன. பொது அறிவில் ஆண் பிள்ளைகளுக்கும் பெண் பிள்ளைகளுக்கும் வித்தியாசம் கிடையாது அதிக அறிவும் ஊக்கமும், உள்ள பிள்ளைகள் எப்பொழுதும் தன்னேடொத்த வயதுடைய பிள்ளைகளுடன் விளையாடுவதிலேயே நாட்டமாக இருக்கும். அதிக அறிவு முதிர்ச்சியான பிள்ளைகள் தனித்துத்தானகவே கணக்குகளைப் போடவும், வாசிக்கவும், தனி ஊக்கம் கொள்ளுவர்."

T. P. வர்கீஸ்.
Principal Govt. Training School,
Trichur.

# Monthly Return
# Appendix 33

புதிய ஆரம்பக் கல்விச் சட்டத்திருத்த
தின் 5-வது பிரிவின்படி பிரதி மாதமும் ஒ
வொரு பாடசாலையும் கீழ்க்கண்ட விதமாக
தயாரித்து மாதாந்திர ரிபோர்ட்டு 15 தேதி
குள் டிப்டி இன்ஸ்பெக்டர்களுக்கு அனுப்ப
வேண்டும். பிரதி மாதமும் எழுதியனுப்
சிரமம் இல்லாமல்,ஆங்கிலத்திலும், தமிழிலு
கலந்து பாரங்கள் (Monthly return forms
அச்சிடப்பட்டிருக்கின்றன. 3 அணு தபா
பில்லைகளை (Postal stmps) அனுப்பினல் 2
பாரங்களும் உடனே தபாலில் அனுப்பிக்க
படும்.

1. பாடசாலையின் பெயர்
2. உபாத்தியாயர்களின் பெயர்களும், தே ச்சியும், சம்பளமும்.
3. வகுப்புவாரி பிள்ளைகள்.
4. விடுமுறை நாட்கள்
5. ஆசிரியர் சங்கங்களுக்கு வராத உபா தியாயர்கள்
6. அடுத்த மாதத்தில் விடப்போகும் வி முறை நாட்கள்
7. அந்தந்த மாதத்தில் மாறுபட்ட, இ வசதி பாடசாலை நடைபெறும், கால கள், விடுமுறை நாட்கள் முதலியன

இவை விபரமாக பாரத்தில் அச்சிட்டிரு
கின்றன. உடனே 3 அணு தபால் பில்
அனுப்பவும்.

மானேஜர்
"ஆரம்பக் கல்வி ஆபீஸ்"
94-95, புதுதெரு மண்ணடி, மதரா

*   *   *

ஓர் அழகி ஆபரணம்போன் றிருக்கிற
ஓர் குணவதியோபணக்குவியல் போன்றிருக்
கிருள்.

—கா

# Presidential Address
# By



M. R. Ry. K. VENKATASAMY NAIDU AVL.
(President, District Educational Council)
CHENGLEPUT.

# Second Chengleput Teachers Managers Conference.

## Mr. K. VENKATASAMI NAIDU'S PRESIDENTIAL ADDRESS.

Ladies and Gentlemen,

I have agreed to preside over this, your second annual conference, not because I am in any way specially qualified to play the role, but because it gives me an opportunity to be serviceable to tho sacred cause of Education. I am therefore grateful to you for having afforded me the opportunity. It is a matter of special gratification to me to be associated with a body of men who are engaged in nation building. The foundation of our national character is laid, the rudiments of our national culture are evolved, in our elementary schools. The moral and intellectual advancement of our nation depends to a vast extent on the efficiency of our Elementary Schools.

The importance of mass education, especially in a country like ours, cannot be exaggerated. A good many, if not all, of our national maladies are traceable to ignorance and illiteracy. Remove illiteracy in India, you will be liberating one fifth of humanity from several disabilities. Our illustrious countrymen of revered memory, Gopalakrishna Gokhale, with his remarkable insight into human frailities, was able to visualise the root-cause of all of India's ills and had foresight enough to prescribe the radical remedy therefor, namely, universal, compulsory elementary education; but the short-sighted Civilian bureaucracy of the day had not even the intelligence to understand, much less the sympathy to be able to appreciate, the far-reaching importance and the inestimable value of Gokhale's proposal. Even after the lapse of two decades since Gokhale mooted the idea, we are to-day as helpless as we were then. It is true that under the Montagu Reforms regime, Education is a Transferred subject and the Indian Minister in charge thereof is comparatively free to initiate wholesome measures of rectification and improvement, but he could do precious little when his hands are tied by paucity of funds. The policy of treating Education as the Cindrella of the household where she should have the place of honour still persists, and it is not likely to be ended until the structure of our administration is simplified so as to enable the State to spare more money for education.

### EDUCATION IN OTHER COUNTRIES

Before I proceed to examine in detail the existing state of Elementary Education in our Presidency with particular reference to your needs and ruquirements I would like to give you an idea of what has been done in progressive countries to further the cause of education. In his book, "Planned Economy for India," Sir M. Visveswarayya, ex-Diwan of Mysore, says:-"The number of literate persons in India, according to the census of 1931, was 23,969,751 men and 4, 169,105 women or a total of 28,138,856 persons, representing a proportion of 8 percent of the total population which in that year amounted to 352.8 millions. The corresponding proportion based on population aged 10 years and over comes to 11 per cent in British India. For other countries the corresponding proportions on the basis of population aged 10 and upwards are Great Britain 92.5%, France 94.1%, Germany 99.7% or practically 100, the United States of America 95.7%, Japan, 96%, Canada 94.9% and Australia 98·3%".

"According to the latest statistics, the number of educational institutions in British India for the year 1930-31 was 262,068, and that of scholars attending them 12,689,086. This gives one institution for every 1036 persons of the total population. Taking Elementary Education alone the number of schools was 204,384 and of pupils 9,362,748 giving a rate of one school for every 1329 persons of the population.

The number of persons attending educational institutions is very large in all progressive countries save India. The figures available show that the percentage of population attending educational institutions in British India was only 4.67 whereas in Great Britain was it 18.8 and in Japan 19, and in the United States of America and Canada, the population go up to the extraordinary figures of 23.7 and 24.4 respectively. While in British India one in every 21 persons of the total population is attending educational institutions, the corresponding proportion in the United States of America and Canada is about 1 in 4. Including adult and vocational classes, one quarter of the entire population of these two countries is at school. In Soviet Russia in 1933, the population in school and college was computed to be about 26 millions, that is, one in every six of the total population was under instruction. This gives a tremendous pull in preparing this population for business life. Money may be wanting for starting schools, but the least that the Government of the country should do is to carry on propaganda drawing attention to the vital importance of mass education and to the many ways in which private effort and enterprise may be enlisted in this behalf. Money spent on education will in the long run prove a protective investment. The expenditure on education in British India for the year 1930-31 was Rs. 28.32 crores. This gives a rate of Rs. 22.3 per head of school-going population and only a rupee per head for the entire population. The corresponding figures per head of school-going population in other countires were Rs. 58 in Japan, Rs. 172 in Great Britain, Rs. 199 in Canada and Rs. 275 in the United States of America. In Soviet Russia, in the four year period in which first five year plan was completed a sum of Rs. 1584 crores was spent on education giving Rs. 158 per head of population under instruction. Taking the expenditure per head of the entire population, the amount in Japan is Rs. 11, in the United Kingdom Rs. 32.4 in Canada Rs. 48 and in the United States of America Rs. 65. The amount spent on education per head in the United States of America is about equal to the entire income per head in British India."

## Education Minister and the Elementary Education Act.,

The facts and figures cited above prove conclusively that the State in India has not done, and it is incapable of doing constituted as it is, its duty as regards Education. The Education Minister, however able and well intentioned he may be, simply cannot do what is necessary in the way of radical reform: but even within the circumscribed sphere a Minister with vision, courage and steadiness of purpose can generate a new spirit, an atmosphere of hope. It has not been our good fortune to have had such a Minister at any time since the inception of the Montagu Reforms. We have had Ministers who had allowed themselves to be merged in the bureaucracy, who have been dictated to by the Director of Public Instruction and his inspectorate. In the present Minister of Education. however. we have a better type, a man who earnestly endeavours to probe the problems he has to tackle and to find abiding remedies therefor. He is an intelligent youngman and



unless he is very careful he will fall in the same pit as his predecessors and at last will be unable to do any thing.

When the Elementary Education Act of 1920 was placed on the Statute book, we were full of hopes of education developing intensively and extensively. We conjured up the vision of universal Elementary Education becoming an accomplished fact within the brief spell of a decade, but although a decade and a half has elapsed we have not advanced far from the position in which we were in 1920, the goal of universal Elementary Education is receding like the mirage, and we are being treated at the expense of the inarticulate tax-payer, to a series of empirical experiments which prove to be no better than pompous futilities and play hide-and-seek with the monster of illiteracy. In 1920 out of a population of approximately 42,000,000 in our Presidency, 173,000 boys and girls were under instruction, there were 35,400 Elementary Schools with 1,434,000 pupils under instruction and there were 27,000 villages with a population not exceeding 2000 which had not even a single Elementary School in them. Now we have a total population of about 45 millions of which children of school-going age are about 6,200,000, only 2,700.000 children are in schools which number 42,600. An increase of about 8000 in the number of Elementary Schools, and of about 13 lakhs in the number of pupils is poor progress indeed considering the amount of money spent, the vastness of the Inspectorate maintained, and the trouble taken by the Ministry of Education. The main purpose of the Elementary Education Act of 1920 was to create a statutory organisation and fund solely for the benefit of Elementary Education. The District Educational Councils which were created for the purpose have not been given a free hand in their work. During the regime of Sir A. P. Patro as Minister of Education the Councils were allowed to rise to the full stature of their status and to perform their functions with ease and dignity unhampered by the dictatoriness of the Director of Public instruction and authriotarianism of the Inspectorate the Councils were what they were intended to be, virtually self, governing units in the realm of Elementary Education analogous to District Boards in the field of Local Self Government. Dr. P. Subbaroyan continued the viril policy inaugurated by Sir A. P. Patro, but under Dewan Bahadur S. Kumaraswamy Reddiar however the Councils suffered an eclipse, their freedom was curtailed, their authority was set at nought, their status vis a vis the Inspectorate was lowered, their dignity was compromised. Instead of protecting the Council from the encroachments of the Directorate of Public Instruction, Mr. Reddiar compelled them, so to say, to bow to the Director.

The policy of the ex-Minister Mr. Reddiar has been suicidal to the cause of Elementary Education. In the Bill which he sponsored with a view to making compulsion real, the Minister went out of the way to give power to the Director of Public Instruction to cancel or abrogate the resolutions of the Councils should he deem those resolutions unnecessary or undesirable. By giving such arbitrary power to the Director of Public Instruction the Minister deprived the District Educational Councils of their fundamental freedom and defeated the primary purpose of the Act itself. The Minister permitted a Director to brew a scheme of consolidation and concentration the accursed Champion Scheme—which caused unnecessary controversy and which has, by a process of subtractions, eventually fizzled out. By the Bill referred to above, which is now a part of the Act, the Minister has given power to Local Bodies to punish parents of pupils who do not

complete the elementary course. Can such intimidation facilitate the progress of Elementary Education? It betrays pitiful lack of imagination woeful ignorance of human psychology, an utter inability to understand the root-cause of the failure of the scheme of compulsion.

## GOVERNMENT COMMUNIQUE

As I have already pointed out, the present minister has had to start with the disadvantege of the legacy of mismanagement left by his predecessor in office. All the same the Kumararajah of Chettinad is making an honest attempt to give a fresh orientation to educational policy. The press communique dated 8th December 1936 is an indication of such an attempt. The communique opines that a large numbers of elementary Schools are uneconomical, ineffective, and in many cases superfluous. We are told that out of 42,600 lower Elementary Schools only 7,160 are complete with five standards, 8,300 schools have only standards 1 to 3 or less, 18,600 schools have only one teacher each and 12,000 schools have less than 30 pupils each on their rolls. Consequently a large number of pupils leave schools without acquiring permanent literacy. The Government hold therefore, that such schools are uneconomical, ineffective and superfluous and that money spent on them is waste. I am unable to share this view which is one-sided, superficial and misleading. The truth is this, in rural areas there is so much of poverty that people are simply unable to send their children to schools. The fact that education is free is by no means a temptation to them. The bread problem is so acute, employment is so scarce, and the standard of income so low that to earn even the simplest subsistence of a family all the members thereof, men, women, and children, have to work.

A boy of 7 or 8 years of age may earn but a paltry pice a day, but his family which is ever in dire need due to chronic indigence, could ill afford to forego even that small sum. That is the reason why a good proportion of children of school-going age do not avail themselves of the 'free' education that the State offers them. unless and until the standard of income of the rural population rises to a level of economic self-sufficiency, it is idle to talk of compulsion, universal Elementary Education is moonshine, and free education is a cruel mockery at the grinding poverty of the helpless populace. It is not possible for poor people in rural areas to avail themselves of free education unless they could earn their subsistence without making their children work for the same. In the city of Madras, the Corporation gives free education plus a mid-day meal but even this additional encouragement and temptation has failed to accomplish the purpose desired, compulsery and universal Elementary Education remains an unrealised and unrealisable Utopia.

Granting for the sake of argument that schools which do not have a full complement of five standards and which have a poor strength of less than 30 are uneconomic and ineffective, what is the remedy? The remedy that the Goverument proposes is worse than the disease itself, Instead of creating appetite in a patient who lacks it due to indigestion, the Government proposes to kill him. I prefer some kind of education to no education; The Government threatens to starve those schools which do not have l the five standards or which have an average attendance of less that 25. This policy based on the fundamental fallacy that a pupil who leaves school before completing the



fifth standard has not attained permanent literacy. This fallacy, I am afraid, must have originated in the facile fancy of the foreign Director of Public Instruction. Love of education and knowledge is so ingrained in the Indian that education even up to the first standard will do to give him a fair measure of permanent literacy. If statistics are collected it will be found that the percentage of persons who relapse into illiteracy is very very low. Therefore I am of opinion that it is nothing short of suicidal to discourage schools which do not have all the five standards, it is nothing but penalising the management which is not responsible for the paucity of pupils and which is, despite of such paucity, holding aloft the torch of education. The aim should be to encourage the management with facilities to make the school full and strong. If aid is withdrawn from schools on the score that they are not complete or strong the result will be more and more of illiteracy. It is absurd to measure educational progress with the yard-stick of utilitarianism. An educational institution is not, and ought not to be regarded as, a profiteering commercial concern whereunto questions of profit and loss are of Paramount importance. On the contrary it is a sacred place of enlightenment. If in a village with 200 children of school-going age, only 20 attend the school and the rest do not, the State should try to induce the 180 to take to education and not bang the door to knowledge against the 20. I appeal to the present Education Minister to take a broad view of the problem and apply to it the elevating leaven of altruism and not drag it down to the drab level of profit and loss.

## NEW AMENDMENTS TO RULES

The Government have published a number of amendments to the Rules and Regulations framed under the Elementary Education Act. The amendments are in accord with the spirit of the new policy of crippling the expansion of Elementary Education. I am surprised and pained to note that one of the amendments proposes an addition to the already manifold arbitrary powers of Inspectors, an addition which unfortunately constitutes a grave substraction from the power and authority vested by the Act in the District Educational Councils. I do not understand why insistence is laid on previous permission being obtained from the Deputy Inspector of Schools for opening a new school when the District Educational Council is there to grant such permission. The amendments proposed limit the power of the District Educational Councils in two other directions: in the matter of assessment of grant, it is not open to the Council to recommend an increase or ruduction of more than 20 per cent, and where a District Educational Officer or Inspectress has recommended a raduction in grant, the Council shall have no power to recommend an increase. These amendments will reduce the councils to utter importence and what is worse, they will have to dance to the tune of the Director andaccept dictation at the hands of lesser deities. A very drastic and undesirable change is proposed as regards grants. The Government proposes to reduce or withhold grants where the strength or attendance falls short of the required standard. This move is due to a gross misconception as to the causes of such diminished strength. It must be clear even to the meanest understanding that the management of a school will strive sincerely and strenuously to increase the strength and sustain it at a rising level: this is especially so in the case of aided schools which stand to gain by enhanced strength. Therefore if the strength or attendance of a school falls Let must be in spite, and not because, of the management due to extraneous factors and fluctuating circumstances which hardly lend themselves to accurate hu-

calculation, much less human control. To reduce grants in such instances would mean penalty for being sincere.

## A SUGGESTION

I venture to suggest to our Education Minister who is anxious to tread unexplored paths, and who is not chary of novel democratic methods, that before embarking upon a comprehensive course of rectification and reform, he would do well to call an informal conference of all interests concerned, such as the Provincial Teacher Managers' Association, Missionary Educational Councils, District Educational Councils, Provincial Teachers' Association, Inspectors and the Director of Public Instruction, for heart-to-heart consultation, full and frank exchange of ideas. Such conferences will conduce to educational progress and reform in no small measure.

Ladies and Gentlemen, I thank you once again for the honour you have done me by calling me to preside over this conference.

2381/83

Printed in the Association Press, Madras.

Published by P. Veeraraghavan 94/95 New Street, G. T. Madras.



vii பொய் ரிஜிஸ்தர்களுக்காகவும் அல்லது ஆசிரியர்களின் எண்ணிக்கையிலோ அல்லது பிள்ளைகளின் அட்டெண்டென்ஸிலோ பொய்க் கணக்கு வைத்திருந்தாலோ அல்லது அங்கீகாரத்திற்கும் கிராண்டுக்கும் உள்ள விதிகளை மீறியதாலோ அல்லது ஒழுங்கீனமான தஸ்தாவேஜுகள் வைத்திருந்தாலோ அவற்றிற்காகவும்.

viii எய்டட் பெண் பாடசாலைகளில் இலாகா அதிகாரிகள் உபாத்தியாயினிகள் வேலைக்கு அகப்படுகிறார்கள் என்று சிபார்சு செய்திருந்தும் உபாத்தியாயர்களை வேலைக்கு வைத்துக் கொண்டதற்காகவும்.

vii மற்றக் குறைகளுடன் பத்தியில் கூறப்பட்டிருக்கும் குறைகள் இருந்து அக்குற்றங்கள் வன்மையாய்க் கண்டிக்கக் கூடியவைகளாக இருந்தால் பள்ளிக்கூட மேற்பார்வைபார்க்கும் அதிகாரி அலெஸ்டு கிராண்டில் 100-க்கு 50 வீதம் குறைக்கச் சிபார்சு செய்யலாம். அவ்விதம் குறைக்கும்படி எழுதும்போது அப்பள்ளிக் கூடத்தில் கா ப்பட்ட குறைகளையும் எக்குறைகளின் மீது இவ்விதம் சிபார்சு செய்யப்படுகிறதென்பதையும் நன்றாக விளக்கி இன்ஸ்பெக்ஷன் ரிபோர்ட்டுடன் தனித்தாளில் எழுதி அனுப்பவேண்டும்.

மேற்பார்வை அதிகாரி கிராண்டைக் குறைக்கும்படி சிபார்சு செய்யப்போவதாகவும் அதற்குள்ள காரணங்களையும் பள்ளிக்கூட மானேஜருக்கு மேற்பார்வையிடும் காலத்திலாவது அல்லது அதுமுடிந்த சமீபகாலத்திலாவது தெரிவிக்கவேண்டும்.

b. மேற்பார்வை அதிகாரிகள் ஒரு பள்ளிக்கூடத்துக்குக் கீழ்க்காணும் நிபந்தனைகளின் மேல் 100-க்கு 50 வீதம் கிராண்டைக் கூட்டுமாறும் சிபார்சு செய்யலாம்:-

1. பிள்ளைகளுடைய அறிவை விருத்திசெய்வதற்காகவும், பிள்ளைகளை நன்றாகப் பேசும்படி செய்வதற்காகவும்; எதையும் உற்றுக்கவனிக்கும்படி செய்வதற்காகவும்; இவைகளினால் ஏற்பட்ட தேர்ச்சிக்காக,

2. தேகப் பயிற்சியை நன்கு கவனித்ததற்காக.

3. பிள்ளைகளைத் தங்கள் வாழ்க்கையில் சரியாக நடந்துகொள்ள வேண்டிய எந்த முறையைக் கற்றுக்கொடுத்தாலும் அதற்காக.

கீழ்க்காணும் பள்ளிக்கூடங்களுக்கு கிராண்டை உயர்த்த சிபார்சு செய்யக்கூடாது:

i ஓராசிரியர் நடத்தும் பள்ளிக்கூடங்களுக்கும்.

ii ஜில்லாக் கல்விச் சபைகள் உதவியளிக்க வேண்டிய பள்ளிக்கூடங்கள் தான் என்று சிபார்சு செய்த 1, 2 வகுப்புகளும், 1 முதல் 3 வகுப்பு வரையுள்ள பள்ளிக்கூடங்களைத் தவிர மற்றப்படி ஐந்தாவது ஸ்டாண்டர்டு வரையில்லாத பள்ளிக்கூடங்களுக்கும்,

iii ஆசிரியர்களில் மூன்றில் ஒரு பங்குக்கு மேல் ஆசிரியப் பயிற்சியில்லாதவர்களையுடைய பள்ளிக்கூடங்களுக்கும்,

2. அலெஸ்டு கிராண்டை 100-க்கு 50 வீதம் குறைக்கும்படிக்கும், அல்லது முழு கிராண்டையும் நிறுத்திவிடும்படிக்கும் அல்லது அலெஸ்டு கிராண்டை 100-க்கு 50 வீதம் அதிகப்படியாகக் கொடுக்கும்படிக்கும் பள்ளிக்கூட மேற்பார்வை யதிகாரிகள்சிபார்சு செய்யலாம். அலெஸ்டு கிராண்டை 100-க்கு 50 வீதம் உயர்த்தவேண்டுமென்று சிபார்சு செய்வதை கிராண்டு பெறும் பள்ளிக்கூடங்களில் 100-க்கு 10 வீதம் தான் சிபார்சு செய்யலாம்.

3. ஜில்லாக் கல்வி அதிகாரியோ அல்லது இன்ஸ்பெக்டரோ சிபார்சு செய்தவைகளின் மேல் ஜில்லாக் கல்விச் சபை தன் உத்தரவைப் பிறப்பிக்கலாம். மேற்பார்வையிடும் அதிகாரி அனுப்பிய ரிபோர்டின் பேரில் அல்லது அவரிடமிருந்து அவர்கள் வரவழைத்த ரிபோர்டின்பேரில் அதற்கு எது சரியென்றுபடுகிறதோ அந்தவிதமாக விசாரணை செய்து அதற்குமேல் அலெஸ்டு கிராண்டில் எவ்வளவு கூட்டுவது அல்லது குறைப்பது என்பதை தீர்மானிக்கலாம்.

அதுவும் ஜில்லா கல்வி அதிகாரியோ அல்லது இன்ஸ்பெக்டரோ சிபார்சு செய்ததில் 100-க்கு 20 வீதம் கூட்டியோ குறைத்தோ சிபார்சு செய்தால் கல்வி இலாகா டைரக்டர் அனுமதியின்றியே பெற்றுக்கொள்ளலாம்.

அதுவும் ஜில்லா கல்வி அதிகாரியோ அல்லது இன்ஸ்பெக்டரோ கிராண்டைக் குறைக்க வேண்டுமென்று கூறியிருக்கும்போது ஜில்லா கல்விச் சபை கிராண்டைக் கூட்டவேண்டுமென்று சிபார்சு செய்யக்கூடாது.

அதுவும் ஜில்லாக்கல்விச் சபையார் சிபார்சு செய்வது அஸெஸ்டு கிராண்டில் 100-க்கு 50 வீதத்துக்குமேல் போகக்கூடாது.

d உள்விதி 6-ல் 2-வது விதியின் கடைசி வாக்கியத்திற்குப் பதிலாக கீழ்க்காணும் பத்தி சேர்க்கப்பட்டிருக்கிறது:—

பணம் குறைவாயிருக்குமிடங்களில் அஸெஸ்டு கிராண்டுத் தொகைகளை முதலில் திறமையான பள்ளிக்கூடங்களுக்குக் கொடுக்கப்படவேண்டும். மீந்ததையே திறமையற்ற பாடசாலைகளுக்கு கொடுக்கவேண்டும்.

i திறமையான பள்ளிக்கூட அஸெஸ்டு கிராண்டுக்கு மேல் அதிகப்படியாகக் கொடுத்த தொகை (அஸெஸ்டு கிராண்டு]க்குமேல் அதிகமிருந்தால்;

ii மற்றப் பள்ளிக்கூடங்களுக்கு அஸெஸ்டு கிராண்டில் பணம் இருப்பதற்குத்தக்கபடி பூராவாகவோ அல்லது வீதாசாரப்படியோ கொடுக்கப்படவேண்டும்.

அறிவிப்பு:....இந்த விதியின்படி திறமையுள்ள பாடசாலை இன்னதென்பது

i ஐந்தாவது ஸ்டாண்டர்டு வரையுள்ள பள்ளிக்கூடம் அல்லது ஐந்தாவது வரையில்லாமல் ஆனால் வருஷந்தோறும் மேல் வகுப்பு ஏற்படுத்திக் கொண்டுபோகும் பள்ளிக்கூடம் அல்லது 1-ம் 2-ம், அல்லது 1 முதல் 3 வரை வகுப்புள்ளவைகளை ஜில்லாக்கல்விச் சபையார் இருக்கவேண்டுமென்று கூறும் பள்ளிக்கூடங்கள்,

ii முதல் வகுப்பிலுள்ள பிள்ளைகளின் தொகையில் 100-க்கு 25 வீதம் உள்ள 4, 5 வகுப்புக்களையுடைய பள்ளிக்கூடங்கள்

iii ஜில்லாகல்வி அதிகாரியோ அல்லது இன்ஸ்பெக்டரோ எக்காரணத்தினாலும் கிராண்டுப் பிடித்தத்திற்குச் சிபார்சு செய்யப்படாத பள்ளிக்கூடங்கள்.

e உள்விதி 6-ல் கண்ட 2-வது விதியின் பின் கீழ்க்காணும் விதி சேர்க்கப்பட்டிருக்கிறது:-

"6-a எந்த வருஷத்துக்குக் கொடுக்கப்பட்ட கிராண்டுத் தொகையோ கொடுபடாமலிருந்து ஒரு வருஷத்துக்குமேல் தள்ளிப் போய்விட்டால் அத்தொகையை ஸ்தல சர்க்கார் அனுமதியின்றி ஜில்லா கல்விச் சபை கொடுக்கக் கூடாது."

f. 3-வது விதிக்குப் பதிலாக கீழ்க்காணும் விதி சேர்க்கப்பட்டிருக்கிறது.-

3. உதவிமனு:—1. அரசியல் வருஷத்தில் உதவிபெற விரும்பும் புதுப் பள்ளிக்கூடங்கள் இடத்துக்குதக்கபடி ஜில்லாகல்வி அதிகாரி, அல்லது பெண்பள்ளிக்கூட சப் அஸிஸ்டெண்டு இன்ஸ்பெக்டரஸ் அல்லது இன்ஸ்பெக்டரஸ் மூலமாக ஜில்லா கல்விச் சபைக்கு மனுச் செய்து கொள்ளவேண்டும். மனுக்கள் டெப்டி இன்ஸ்பெக்டர் அல்லது சப் அஸிஸ்டெண்டு இன்ஸ்பெக்டரஸிடமோ செப்டம்பர் முதல் தேதிக்குள் போய்ச் சேரவேண்டும் ஜில்லா கல்வி அதிகாரி அல்லது இன்ஸ்பெக்டரோ தாங்கள் சிபார்செய்து ஜில்லா கல்விச்சபைக்கு டிஸம்பர் முதல் தேதிக்குமுன் அனுப்பிவிடவேண்டும்.

2. தற்காலிகமாக அங்கீகாரம் கொடுக்கப்பட்ட பள்ளிக் கூடங்கள் அவைகளுக்குக் கொடுக்கப்பட விசேஷ காலம் முடிவடைந்து ஒருமாத காலத்திற்குள் ஜில்லா கல்விச் சபைக்கு அவைகளுக்குரிய மேற்பார்வை யதிகாரிகள் மூலம் உதவிக்காக மனுச்செய்து கொள்ளவேண்டும்.

[g] 3-A. விதி நீக்கப்பட்டது.

### தேர்ச்சி பெறாத உபாத்தியாயர்கள் இருக்கவேண்டிய தொகை

ஒரு உபாத்தியாயரால் பாடசாலை நடத்தப்பட்டு வருமானால் அந்த உபாத்தியாயர், தேர்ச்சிபெற்றவராகவும், இரண்டு உபாத்தியாயர்களால் நடத்தப்பட்டு வருமானால், 2 உபாத்தியாயர்களும், தேர்ச்சிபெற்றவர்களாக இருக்கவேண்டும், இரண்டு உபாத்தியாயர்களுக்கு மேற்பட்டு நடத்தப்படும் பாடசாலைகளில் 3-ல் ஒரு பங்கு உபாத்தியாயர்களுக்கு மேல் தேர்ச்சி பெறாத உபாத்தியாயர்கள் இருக்கக்கூடாது.

### மாதாந்திர ரிபோர்ட்டு

பிரதி மாதமும் 7-ம் தேதிக்குள் முந்திய மாதத்தில் பாடசாலையிலுள்ள, பிள்ளைகளின் தொகை, உபாத்தியாயர்களின் எண்ணிக்கை, புதிதாக சேர்ந்த பிள்ளைகள், விட்டுப்போன பிள்ளைகள் கணக்கு முதலியவைகள் அனுப்பப்படவேண்டும். அவ்விதம் தவறினால் பாடசாலை மூடப்பட்டுவிட்டதாக கருதப்படும், ஆசிரியர்கள், ஆசிரியர்கள் சங்கத்திற்கு ஆஜராகத், தவறினால், அவ்விதம் ஆஜராகவிருப்பதற்கு டிப்டி இன்ஸ்பெக்டர்களின் முன் உத்திரவைப்பெற வேண்டும்.

19034

# புதிய சட்டத் திருத்தம்

நமது இராஜதானியில் அடிக்கடி டைரக்டர்கள் புதிது புதிதாக மாறும்போதெல்லாம், ஒவ்வொரு புதிய ஆபத்து ஆரம்பக் கல்விக்கு ஏற்படுகிறது, சாம்பியன் காலத்தில் சாம்பியன் திட்டம், ஸ்மித் காலத்தில், கன்ஸாலிடேஷன் கான்ஸண்டிரேஷன் திட்டம், முதலிய திட்டங்கள் தோன்றுவதும் மறைவதுமாக இருக்கிறதே யொழிய, ஒரு திட்டமாவது நமது நாட்டின் பாமரத்தன்மையை யொழித்து ஆரம்பக் கல்வியை அபிவிருத்தி செய்யும் திட்டமாகக் காணப்படவில்லை. தற்போது ஸ்டாத்தம் துரையவர்கள் விடுத்துள்ள ஒரு அறிக்கையில் மேற் குறித்த இரண்டு திட்டங்களையும் வாபீஸ் வாங்கிக்கொண்டதாக தெரிவித்திருக்கிறார். தம்முடைய ஆட்சியில் ஒரு புதிய திட்டத்தையும் கொண்டு வந்திருக்கிறார்.

அதாவது "30 பிள்ளைகளுக்குக் குறைவாயுள்ள 12000 பாடசாலைகளைக்கூடுமானவரையில் மூடிவிட வேண்டும், ஒரு உபாத்தியாயரால் நடத்தப்படும் 18600 பாடசாலைகளை அழித்துவிடவேண்டும். இவைகளினால் பணமெல்லாம் வீணாய் விடுகிறது, 5 வகுப்பிற்கு குறைந்த பாடசாலைகளெல்லாம் முழுப்பாடசாலைகளல்ல, 4-வது 5-வது வகுப்புக்களில் முதல் வகுப்பில் 100-பிள்ளைகளிருந்தால் 25 பிள்ளைகள் இருக்கவேண்டும், 25 பிள்ளைகள் ஆஜரானால் ஒரு உபாத்தியாயர் கிராண்டைக் கொடுக்கவேண்டும், பிள்ளைகள் பாடசாலைகளைவிட்டு அடிக்கடி நின்றுவிடக்கூடாது. அவ்விதம் நின்றுவிட்டால் கிராண்டைக் குறைத்துவிடு. மாதாமாதம், ரிபோர்ட்டு அனுப்பு, இல்லாவிடில் பாடசாலை மூடிவிடப்படும்' என்று புதிய புதிய உத்திரவுகளை டைரக்டர் ஏற்படுத்தி அதை அரசாங்கத்தார் ஆமோதித்து கெஜட்டில் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன. இவைகள் ஆரம்பக் கல்வி அபிவிருத்திக்கு எவ்வளவு தூரம் உதவிசெய்யுமென்பது விளங்கவில்லை. ஒரு வகுப்பில் 25 பிள்ளைகள் ஆஜராக வேண்டுமானால் சுமார் 30 அல்லது 35 பிள்ளைகள் ரிஜிஸ்டரில் இருக்கவேண்டும். சாதாரணமாக ஆரம்பப் பாடசாலைகளில் 20 பிள்ளைகளுக்கு மேல் ரோலில் இருக்க முடியாது. அதிலும் 4-வது, 5-வது வகுப்பில் 10 பிள்ளைகளுக்கு மேல் இருக்கமாட்டார்கள். மேலும் டைரக்டர் ரிபோர்ட்டுகளில் ரோலில் 100-க்கு 10 பிள்ளைகளே மேல் வகுப்பில் படிப்பதாகத் தெரிவித்திருக்கிறார். அப்படி யிருக்க திடீரென்று 100-க்கு 25 பிள்ளைகளே மேல்வகுப்பில் இருக்கவேண்டுமென்று வற்புறுத்துவது அனுபவத்தில் நடக்காதகாரியம். பலகல்விச் சபைகளும், மஹாநாடுகளும் கேட்டிருக்கிறபடி, ஒரு உபாத்தியாயருக்கு ஒரு வகுப்பில் ரோலில் 25 பிள்ளைகளிருந்தால் கிராண்டு கொடுக்கப்படவேண்டும் இல்லையேல் ஆவரேஜ் அட்டண்டன்ஸ் 15 பிள்ளைகளிருந்தால் ஒரு உபாத்தியாயர் கிராண்டு கொடுக்கப்படவேண்டும்.

பிள்ளைகள் அடிக்கடி விட்டுப் போவதின் காரணத்தினாலும், அதிக இடவசதி [accomdation] பெஞ்சுகள், படம் நாற்காலிகள் [equipment] இவைகள் அதிகம் இல்லாத காரணத்தினாலும் கிராண்டைக் குறைப்பது சரியல்ல. அதிக இடவசதிகள் செய்துக்கொள்ள [Rental Grant] வாடகைக்கிராண்டு அரசாங்கத்தார் கொடுப்பார்களானால் $9\frac{1}{2}$ சதுர அடி விகிதம் இடவசதி செய்யமுடியும். தற்போது உபாத்தியாயர்கள் கிராண்டிலிருந்தே வாடகைக்கு பணம் கொடுக்கவேண்டியிருக்கிறது.

தனிப்பட்ட உபாத்தியாயர்களால் நடத்தப்பட்டு வரும் பாடசாலைகளும், 3-வது வகுப்பு வரையிலுள்ள பாடசாலைகளும் திறமையற்றவைகளெனவும், அவைகளுக்கு இன்கிரிமென்ட் கொடுக்கப்படாதெனவும் சட்டத்திருத்தம் செய்வது மிகப் பிசகு. 30 பிள்ளைகளுள்ள சிறு பாடசாலைகளை நன்றாகப் பரிசீலனை செய்து பார்ப்போமானால், வகுப்புக் கணக்கில் 1.2 ஆக இருந்தாலும், அதில் குறைந்தது 6, 7 பிள்ளைகள் 4-வது 5-வது வகுப்புக்களும் சமானமாக நன்றாக வாசிக்கவும், எழுதவும்,

சிறு கணக்குகளிடப் போடவும் சாத்தியமுள்ளவர்களாக இருப்பார்கள். ஆதலின் பாடசாலைகளில் எத்தனை பிள்ளைகள் நன்றாக எழுதப்படிக்கத் தெரிந்திருக்கிறார்களோ [Lterary test] அதன் மீது ஆலோசித்து கிராண்டு அதிகப்படுத்தவேண்டுமே யொழிய, கட்டிடங்களையும் பெஞ்சு நாற்காலிகளையும், படங்களையும், தோட்டங்களையும், பார்த்து கிராண்டுகளை உயர்த்துவது சரியல்ல தற்போது நமது நாட்டில் 100-க்கு 9 பேர்களே வாசித்தவர்களாக இருக்கிறார்கள். கடந்த 20 ஆண்டுகளாக. கொஞ்சமேனும் படித்தவர்கள் தொகை அதிகப்படவில்லை. ஆனால் ரஷ்ஷியாவிலோ, 20 வருடத்தில் 100-க்கு 20 லிருந்து 80 ஆக படித்தவர்கள் தொகை அதிகப்பட்டிருக்கிறது. அந்த 20 வருடத்தில் கல்வி அபிவிருத்திக்காக 1584 கோடி ரூபாய்கள் ரஷ்ஷியாவில் செலவிட்டிருக்கின்றார்கள். நமது நாட்டிலோ வருடத்திற்கு 50 கோடி ரூபாய்க்கு மேல் இல்லை. ஆதலின் நமது நாட்டில் பாமரத்தன்மை ஒழிய வேண்டுமென்ற உண்மை எண்ணம் அரசாங்கத்திற்கு இருக்குமானால் நமது இராஜதானி பொருத்தமட்டில் 5 வருட திட்டமொன்றை ஏற்படுத்திக்கொண்டு குறைந்தது வருடா வருடம் அரைக்கோடி ரூபாய் (50 லக்ஷம்) அதிகரித்துக் கொண்டே போக வேண்டும். நினைத்தபடி ரூல்களையும் சட்டங்களையும் கொண்டுவராமல், ஆசிரியர்கள், ஆசிரிய மானேஜர்கள், கல்விச் சபை, சட்டசபை அங்கத்தினர்கள், மிஷனரிகள், அநுபவமுள்ள இன்ஸ்பெக்டர்கள், டைரக்டர் அடங்கிய ஒரு கமிட்டி ஏற்படுத்தி, அதில் நன்றாக ஆலோசித்து கனம் மந்திரியவர்கள் ஒரு புதிய திட்டத்தைத் தயாரிப்பார்களானால்தான் ஓரளவு ஆரம்பக் கல்வியை அபிவிருத்தி செய்ய வழி ஏற்படும் தற்போது பிரசுரித்துள்ள சட்டத்திருத்தத்தை, கல்விச் சபைகள், ஆசிரிய மானேஜர்கள், கூட்டங்களிலும், மகாநாடுகளிலும் செய்த எதிர்ப்புக்களை பொருட்படுத்தாது ஒரு சமயம் புதிய கல்வி மந்திரியார், டைரக்டர் சிபார்சுகளையே சிரமேற்கொண்டு அமுலுக்குக் கொண்டு வருவாரானால், தற்போதுள்ள ஆரம்பக்கல்வியும், குறைவுபடுவதல்லாமல், அனாவசியமான எதிர்ப்புக்களுக்கு இடமுண்டாகுமென்பதில் சந்தேகமில்லை. அவ்விதம் புது மந்திரியார் இப்புதிய திட்டத்தைக்கொண்டு வந்து அபகீர்த்தியடையாமல், இந்தப் பொருப்பை வரப்போகும் புதிய மந்திரிகளின் வசம் விட்டுவிடுவாரென நம்புகின்றோம்.

---


# அகில இந்தியா

## ஆசிரியர்கள் அஷ்யூரன்ஸ் ஸொஸைடி, லிமிடெட்,

## சென்னை.

ஆசிரியர்களால், ஆசிரியர்களின் நன்மைக்காக ஏற்படுத்தப்பட்டது.

உங்கள் வயோதிகத்தில் உங்களுக்கும் உங்கள் குடும்பத்திற்கும்

நீங்கள் என்ன சேமித்து வைத்திருக்கிறீர்கள்?

உடனே ஏஜன்ஸி நிபந்தனைகளுக்கும் மற்ற விவரங்களுக்கும் எழுதவும்.

**தலைமை ஆபீஸ்:—**

94-95, புதுத் தெரு, மண்ணடி, ஜி. டி. மதராஸ்.


# கிராம முன்னேற்றம்

(திரு. எம். எஸ். ஸ்ரீநிவாச சர்மா)

இப்பொழுது எங்கும் கிராமப் புனருத்தாரணம் பற்றிப் பேசப்படுகிறது. பிரசங்கம் செய்வோர் அனைவரும் 'கிராமத்துக்குப் போங்கள்' என்று கூறுகிறார்கள். ஐக்கோர்ட்டு மாஜி நீதிபதிகளும் மாஜி சப் ஜட்ஜுகளும் இதே பல்லவி பாடுகிறார்கள். ஆனால் அவ்விதம் பேசுவோர் கிராமங்களுக்குச் சென்று வசித்துப் பிறருக்குப் பாடங்கற்பிக்கக் கருதுகிறாரில்லை வேலையிலிருந்து ஓய்வு பெற்றதும் அவர்கள் கிராமங்களுக்குச் சென்றுகிராமப்புனருத்தாரணவேலைகளைச் செய்யக் கூடாதா? இதனால் நகர வாழ்வெனப்படும் நரக வாழ்விலிருந்து விடுபட்டு இயற்கையுடன் வாழ்ந்து ஆரோக்கியமாயிருக்கும் வசதியும் அவர்களுக்குண்டாகும். அவர்களது நீண்டகால அநுபவமும், ஆழ்ந்த கல்வியறிவும் கிராமாந்தர வேலைகளை அபிவிருத்தி செய்வதில் உபயோகமாயிருக்கும்.

கிராமாபிவிருத்திக்குக் கிராமப் பள்ளிக்கூடங்கள் சிறந்த சாதனங்களாகும். கிராமத்து மக்களோ விவசாயிகள்; ஆகவே கிராமத்துப் பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுக்கப்படும் கல்வியும் விவசாயம் பற்றியதாயிருக்க வேண்டும். அதுவும் நவீன முறைகளோடு கலந்ததாயிருத்தல் நன்று. மேலும் சாதாரணமாக ஒரு பிரஜா அந்தஸ்துக்குத் தெரியவேண்டிய விஷயங்களும் அவர்களுக்குக் கற்பிக்கப்படல் வேண்டும்.

### கிராமத்தின் நிலைமை

ஆனால் இப்பொழுது கிராமப் பள்ளிக்கூடங்களில் உயிர் இல்லை. நகரப்பள்ளிக்கூடங்களைப் பார்த்துக் கிராமப் பள்ளிக்கூடங்களும் தவறான முறையில் நடத்தப்படுகின்றன.

கிராமத்துப்பிள்ளைகள் நகரத்துக்குச் செல்ல விரும்புகிறார்கள். கல்வி போதிக்கும் முறையில் எவ்வித வித்தியாசமும் இல்லை. அளிக்கப்படும் கல்வி வாழ்க்கையின் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடியதாயிருக்கவேண்டும். நகரத்துப் பிள்ளைகள் எந்த விஷயத்தையும் ஒருவர் சொல்லக்கேட்டே தெரிந்து கொள்ளுகிறார்கள். ஆனால் கிராமத்துப் பிள்ளைகளோ பார்ப்பதன் மூலம் 'அறிகிறார்கள். சேர்ந்தாப்போல் பல மணி நேரம் வகுப்பு அறைக்குள் உட்காருவது கிராமத்துப் பிள்ளைகளுக்குப் பிடியாது. பாடப் புத்தகங்களைப்படிப்பதனால் அவர்கள் வாழ்வுக்குரிய விஷயங்கள் ஒன்றையும் அறிகிறார்களில்லை.

ஆகவே கிராமப்புனருத்தாரணத்தில் முதல் முதல் செய்யவேண்டிய வேலை, கல்வி முறையை மாற்றுதலாகும்.

### கிராமத்துக்கு வேண்டிய கல்வி

இப்போது கிராமப் பள்ளிக்கூடங்களில் அநுஷ்டானத்திலிருந்து வரும் போதனா முறை, பாட புத்தகங்கள் முதலியவை பிரயோஜன மற்றவை. கிராமத்துப் பிள்ளைகள் புத்திசாலித்தனத்தில் நகரத்துப் பிள்ளைகளுக்கு எவ்விதத்திலும் குறைந்தவர்களல்லர். வயல்களைப் பற்றியும் நிலங்களைப் பற்றியும் குளங்களைப் பற்றியும் சொல்லுங்கள். ஒரு நிலத்தில் மணலும் வேறு நிலத்தில் களிமண்ணும் இருக்கக் காரணம் என்னவென்று அந்தப் பிள்ளைகளுக்குக் கூறுங்கள். அவர்கள் ஆவலுடன் கேட்கிறார்களா இல்லையா பார்ப்போம்!

இப்பொழுது இருக்கும் கல்விப் பரிசோதனை இலாகாவை இரண்டாகப் பிரிக்கவேண்டும். ஒரு இலாகாவிலிருப்போர்க்குக் கிராமக் கல்வியும் மறு இலாகாவில் இருப்போர்க்கு நகரக் கல்வியும் தெரிந்திருத்தல் வேண்டும்.

நகரக்கல்வி விஷயம் பற்றித் தெரிந்தோர் அவ்விஷயத்திலும், கிராமக் கல்விமுறை தெரிந்தோர் அதிலும் உழைத்தல் அவசியம். போதனாமுறையிலும் இரு பிரிவு ஏற்படுத்தல் நன்று. ஒருபிரிவினர் நகரில் வேலைக்கு வேண்டியவர்களையும், இன்னொரு பிரிவினர் கிராம வேலைக்கு வேண்டியவர்களையும் பழக்கலாம்.

### அமெரிக்காவில் புதுமாதிரியான கல்வி

அமெரிக்காவில் ஒரு நூதன முறை கையாளப் படுகிறது. அம்முறைக்குச் 'சங்கவேலை' என்று பெயர். கிராமப் பள்ளிக்கூடங்களி

லுள்ள சிறுவர்க்கும் சிறுமியர்க்கும் சிறுசிறு நிலங்கள் ஒதுக்கப்படுகின்றன. அவைகளில் அவர்கள் பயிர் செய்கிறார்கள்; பிராணிகளை வளர்க்கிறார்கள். வருஷம் ஒருமுறை 'விவசாயத் திருநாள்' ஒன்று நடைபெறுகிறது. தங்களுக் களிக்கப்பட்ட நிலங்களில் நன்கு பயிர் செய்திருப்பவர்களுக்குப் பரிசு அளிக்கப்படுகிறது. தாங்கள் செய்த வேலைகளைப்பற்றி நன்றாக வியாசம் எழுதியிருப்பவர்களுக்கும் பரிசளிக்கப் படுகிறது. அம் முறை வெற்றிகரமாக நடைபெறுகிறது. கிராமக் கல்வி கிராமத்துப் பிள்ளைகளை விவசாயிகளாக்குவதோடு அமையாது நாட்டுப் பற்றுள்ளவர்களாக்கவும் வேண்டும். அதற்குப் பயிற்சி பெற்ற உபாத்தியாயர்களும் அவசியம்.

சுகாதாரப் படிப்பு அவசியம்

எப்பொழுது வேண்டுமானாலும் கிராமத்துப் பள்ளிக்கூடங்களைப் போய்ப் பாருங்கள். அங்கு அசுத்தமான பிள்ளைகளே காணப்படுவார்கள். அவர்களுக்குச் சுத்தத்தையும் ஆரோக்கிய வாழ்வையும் போதிக்க வேண்டும். சுத்தத்தாலேயே தொத்து வியாதிகளைப் போக்கக்கூடுமென்றும், தெய்வங்களுக்கு ஆடு கோழி பலியிடுவதால் வியாதிகள் போகாவென்றும் அவர்களுக்குப் போதிக்கவேண்டும்.

விவசாயிகள் கடன் சுமைபற்றி இங்குக் குறிப்பிடவேண்டும். பண்டிகைகளுக்கும், கட்குடிப்பதற்கும் அவர்கள் கடன் வாங்குகிறார்கள். நல்லவேளையாகக் காப்பிஹோட்டல்களும், பந்தயச் சாலைகளும் கிராமங்களுக்குப் பரவவில்லை. கிராமத்துமக்கள் கல்வி பெறாமையே அவர்களது கஷ்டத்துக்குக் காரணம். அவர்களது கல்விக்குச் செலவழிக்கப்படும் பொருள் வீண் அன்று. இரண்டு மூன்று தலைமுறைகளில் அதன் பலன் தெரியும்.


# Venkatrama & Co.

Printers, Publishers, Book-sellers, Etc.

## வெங்கடராம நீதிகதா வாசகம்

| | | | |
|---|---|---|---|
| இரண்டாம் பாகம் | ... 0—1—6 | நான்காம் பாகம் | ... 0—1—6 |
| மூன்றாம் பாகம் | ... 0—1—6 | சித்ரபால சிக்ஷை | ... 0—3—0 |

## வெங்கடராம தமிழ் வாசகம்

| | | | |
|---|---|---|---|
| முதல் வகுப்பு | ... 0—2—0 | நான்காம் வகுப்பு | ... 0—4—0 |
| இரண்டாம் ,, | ... 0—3—0 | ஐந்தாம் ,, | ... 0—4—6 |
| மூன்றாம் ,, | ... 0—3—0 | | |

## POETICAL SELECTIONS

(Approved by the Text Book Committee)

| | | | |
|---|---|---|---|
| FIRST BOOK For I Form | 0—3—0 | THIRD BOOK III Form | 0—4—0 |
| SECOND ,, II ,, | 0—3—0 | VENKATARAM'S 1st Primer | 0—2—0 |

நெ. 4, கார்பொரேஷன் பழக்கடை சைனாபஜார், மதராஸ்.




தீரவிசாரிக்க வேண்டுகிறோம்

ஆரம்பக்கல்வி விஷயத்தில் அரசாங்கத்தார் புதிதாகச் செய்துள்ள மாறுதல்களைப்பற்றி ஓர் அறிக்கை விடுத்துளார்கள். அதில் இருவிஷயங்கள் குறிப்பிடத்தக்கவை. கல்வி இலாகாவில் வீண் செலவு அதிகமிருக்கிறதென்பதை அவர்கள் தெரிந்து கொண்டார்கள். திறமையற்ற பள்ளிக்கூடங்களுக்கு உதவியளிப்பதை நிறுத்துவதன் மூலம் இந்த வீண் செலவைக் குறைக்க அவர்கள் கருதுகிறார்கள். பள்ளிக்கூடங்கள் திறமையுடன் நடத்தப்பெறும் பொருட்டு அதிக பரிசோதகர்களையும் நியமிக்க அவர்கள் விரும்புகிறார்கள் ஜில்லாபோர்டு பள்ளிக்கூடங்களுக்கும், உதவிபெறும் ஆரம்பப் பள்ளிக்கூடங்களுக்கும் இருந்துவரும் போட்டியைக் குறைக்கவேண்டுமென்பது அரசாங்கத்தார் கருத்து.

இவ்விஷயத்தில் அரசாங்கத்தார் எவ்விதம் முடிவு செய்யக்கூடுமென்பது விளங்கவில்லை. பல பள்ளிக்கூடங்களில் வருகைக் குறிப்பு ஒழுங்கற்ற முறையில் பதியப்பெறுகிறது. இதற்குக் காரணம், விவசாயிகள் தங்களுக்குச் சாதகமாகப்பிள்ளைகளை வேலை செய்யக்கூட்டிச் செல்வதேயாகும். ஏழைக்குழந்தைகளுக்குக் கல்வி யளிக்கத்தக்க பள்ளிக்கூடங்கள் கிராமங்களில் தோன்றும் வரை இவைகளைக்கலைத்துவிடக்கூடாது. இம்மாதிரிப் பள்ளிக்கூடங்கள் விஷயத்தில் தீர விசாரித்து அதன்பின் ரத்து செய்யுமாறு அரசாங்கத்தை வேண்டுகிறோம்.

"சிறு பெண்களுக்கு ஆரம்பக்கல்வி முறை கட்டாயமாக்கப்படல் வேண்டும். படிப்பில் ஆர்வமுள்ளவர்களுக்கு உபகாரச் சம்பளமோ இலவசக்கல்வியோ அளித்தல் நல்லது. படித்த பெண்களாகப் பத்துப்பேர் சேர்ந்து கிராமங்களுக்குச் செல்லுங்கள். கிராம மக்களிடையே உற்சாகத்தையும் சந்தோஷத்தையும் உண்டு பண்ணுங்கள். சினிமாப்படங்கள் மூலமாகவும் பிரசங்கங்கள் மூலமாகவும் சுகாதாரத்தை அவர்களுக்குப் போதியுங்கள். இராப் பள்ளிக்கூடங்களையும், சிறு புத்தகாலயங்களையும் ஏற்படுத்துவது நல்லது. கிராமக்கைத் தொழில், கைச்சித்திரவேலைப்பாடுகள் முதலியவற்றிற்கு ஆதரவளிக்கவேண்டும். கண்ணைக் கவரும் அன்னியப் பொருள்களை வாங்கக்கூடாது. சுதேசிப் பொருள்களை வாங்குவது தங்கள் கடமையென்றுபெண்கள் கருதுதல்வேண்டும்'.


(ஒன்று முதல் 5-வது வகுப்புக்களுக்குப் பாடபுத்தகங்களாக வைக்கத் தகுந்தவை)

## மணி வாசகம்

நூதன முறையில் ஆரம்ப பாடசாலைகளைப் பார்வையிடும் அனுபவ மிகுந்த ஆசிரியர்களால் தயாரிக்கப் பெற்றவை. பல சித்திரப் படங்கள் கொண்டவை. பாடங்களின் அளவும் தன்மையும் நடையின் நேர்மையும் தெளிவும் இவ்வாசக வரிசையின் பெயருக்கு ஏற்றவாறே அமைந்துள்ளன.

| | அ. | பை. |
|---|---|---|
| முதல் புத்தகம் | 2 | 6 |
| இரண்டாம் புத்தகம் | 3 | 0 |
| மூன்றாம் ,, | 4 | 0 |
| நான்காம் ,, | 5 | 0 |
| ஐந்தாம் ,, | 6 | 0 |

## பாலர் கணிதம்

முத்தியாலுப்பேட்டை
உயர்தர கலாசாலை பிரதம ஆசிரியர்
கே. எஸ். ஸ்ரீநிவாசாச்சாரியார்
B. A., L. T.
இயற்றியது.

| | |
|---|---|
| முதல் புத்தகம் 3-வது வகுப்புக் குரியது. | 6 அணா |
| இரண்டாம் புத்தகம் [illegible]-வது வகுப்புக் குரியது. | 7 அணா |
| மூன்றாம் புத்தகம் 4-வது வகுப்புக் குரியது. | 8 அணா |

[இப்புத்தகங்களுக்குத் தெலுங்கு பிரதிகளுண்டு.]

இவை அரசாங்க அங்கீகாரம் பெற்றவை.

ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம்,
53-56, பவழக்காரத் தெரு, சென்னை.

# மாதர் பகுதி

## ஜப்பானியப் பெண்கள்

'கிறிஸ்டியன் ஸயன்ஸ் மானிடர்' என்ற பத்திரிகையில் திரு. டிரம்மண்டு என்பவர் ஜப்பானியப் பெண்களைப்பற்றி எழுதியுள்ள வியாசத்தின் சாரம் வருமாறு:—

ஜப்பானியப் பெண்களைப் பற்றி அறிய வேண்டுமென்ற நோக்கத்துடன் ஒரு கூட்டத்துக்குச் சென்றேன். ஆனால் அங்கே அமெரிக்காவைப் போல ஏராளமான பெண்கள் கூடியிருக்கவில்லை. மூலைக்கொருவராக ஒருசிலரே வீற்றிருந்தனர். அவர்கள் அணிந்திருந்த உடையோ நவீன முறைக்குத் தக்கதாயில்லை. பிறகு ஒரு விருந்துக்குச் சென்றேன். விருந்துக்கு வந்த பிரமுகர்களில் பலர் தம் மனைவியரை அழைத்து வரவில்லை. அவர் தம் வீடுகளில் குழந்தைகளைக் கவனிக்க யாராவது இருந்தாலன்றிப் பெண்கள் விருந்துகளுக்கு வருவதில்லை. சில பெண்மணிகளுடன் சந்தித்துப் பேச நான் விழைந்தேன்; பெண்கள் இயக்கத்தில் போன்புபூண்ட ஒருவரைக் கண்டேன்; 'பெண்களைச் சமத்துவமாக நடத்த வேண்டாமா? அவர்களுக்கு ஓட்டுரிமை வேண்டாமா?' என்று கேட்டேன்.

'பெண்களுக்கு ஓட்டுரிமை வேண்டுமா? சமத்துவம் வேண்டுமா? கல்வி வேண்டுமா? எதற்கு? இவை அவசியமென்று நாங்கள் கருதவில்லை. முதலில் ஆண் பிள்ளைகள் படித்தாலல்லவோ பெண்கள் படிப்பதற்கு?' என்று பதில் கிடைத்தது. அதன்பிறகு வேறொரு பெண்மணியைச் சந்தித்தேன். அவர் ஜப்பானியரின் பழைய முறைப்படி உடையணிந்திருந்தார்; நவீன விஷயங்களனைத்தையும் அறிந்தவர்.

'நீங்கள் தற்கால உலகவிஷயங்களை நன்கு அறிந்திருக்கிறீர்கள். ஆனால் உடையணிவதில் மட்டும் நவீன முறையைக் கையாளாததன் காரணம் என்ன?' என்று நான் அவரைக் கேட்டேன்.

'என் தாயார் மிகவும் முற்போக்கான கொள்கைகளை யுடையவர்; என்னை நவீன முறையில் அறிவு பெறச்செய்தார். ஆனால் ஜப்பானியராகிய நாங்கள் உடை உடுத்தும் மாதிரியை அடிக்கடி மாற்றுவதில்லை' என்று அவர் கூறினார்.

தேநீர் விருந்துகளில் குடியாத ஜப்பானியப் பெண்மணியை நான் கண்டேன். அவருக்கு அளிக்கப்படும் பொருள்களை அவர் தம் வீட்டுக்கு எடுத்துச்சென்று தம் உறவினர் ஒவ்வொருவருக்கும் ஒரு சிறுபங்கு அளிக்கிறார். அவர் ஒரு சமூகத்தொண்டர்.

வேறொரு பெண்மணியுடன் கலியாண விஷயமாக நான் சம்பாஷித்தேன். அவர் நவீன நாகரிகத்தில் மூழ்கித்திளைப்பவர்; கனடாவில் சுற்றுப்பிரயாணம் செய்தவர். நவீன விஷயங்களைப் பற்றியெல்லாம் அவர் பேசினார். கலியாணப் பேச்சை மெதுவாக அவரிடம் அவிழ்த்து விட்டேன்.

'கலியாணம் பெற்றோர் பார்த்துச் செய்வது' என்று அவர் சொன்னார்.

நவீன முறைப்படி கலியாணம் செய்து கொண்ட இருவரைப்பற்றி அவருக்குத்தெரியுமாம். அந்தக் கல்யாணத்துக்குப் பலத்த எதிர்ப்பு இருந்ததாம். முடிவில் அந்தத் தம்பதிகள் விவாகரத்து செய்து விட்டதாக அவர் கூறினார்.

முற்போக்கான பெண்கள் பலர் அங்கேயிருக்கிறார்கள். 16 வயதான பெண்கள் பலர்தொழிற்சாலைகளில் வேலை செய்கிறார்கள். ஆனால் அவர்களைப்பார்த்தால் 14 வயதுடையவரென மதிக்கலாம். சில காலம் அவர்கள் பொருள் சேர்க்கிறார்கள்; போதிய பொருள் கிடைத்ததும் வேலையை விட்டுவிட்டுக் கலியாணம் செய்து கொண்டு வாழ்கிறார்கள். மற்றும் சில பெண்மணிகள் ஆடவருடன் கலந்து களியாடல் புரிவதற்கும் முன் வருகிறார்கள்.

'நவசக்தி'

# கல்வி

ஸ்ரீமதி. அசலாம்பிகையம்மாள் அவர்கள்

கல்வியின் அவசியத்திதைப்பற்றி எவ்வளவு கல்விமான்கள் எவ்வளவு காலம் எவ்வளவு விரிவாய் எடுத்துக் கூறினாலும் அவையனைத்தும் அதற்கொரு முடியுரையாகாது.

களம்பு நிலத்திற்குச் சமமான மனிதனது இயற்கையறிவானது கல்வியாகிற கலப்பையால் பலகாலும் உழப்பட்டு வேள்வியாகிற புனலும் பாய்ச்சப்பெற்றாலன்றி விளைந்து பயன்றரக் கூடியதல்ல.

இதுபற்றியே

"கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே"

என்றும் "இளமையிற்கல்" என்றும் கூறினர் பெரியோர். ஒருவன் செல்வத்தால் அரசிளங் குமாரனாயினும் கல்வியிற் சிறவானாயின் அவனைப் பிறர் நன்கு மதியார்.

இதனை

"மன்னனு மாசறக் கற்றோனும் சீர்தூக்கின்
மன்னனிற் கற்றோன் சிறப்புடையோன்—
மன்னனுக்குத்
தன்றேய மல்லாற் சிறப்பில்லை கற்றோர்க்குச்
சென்றவிட மெல்லாம் சிறப்பு"

என்றும், "யாதானு நாடாமல் ஊராமல் என்னொருவன், சாந்துணையும் கல்லாத வாறு" என்றும் கூறினர். இதனாற் கற்றோருக்கு எந்த ஊரும் சொந்தவூராம், எந்த நாடும் சொந்த நாடாம்; எந்த மனிதரும் பந்துவாவர் என்று அறியலாகும்.

இம்மையிற் பிறர் மதிக்க இல்வாழ்விற்கு இன்றியமையாத சாதனங்களை யெய்தவேண்டினும் கல்வியே துணைக்காரணமாகும். புகழ்ச்சியும் சுகமும் கல்வியாலன்றி யெய்துவதின்றாம். [illegible]மையை அடையவேண்டினும் கல்வியே [illegible]ாகும். இதனை "ஒருமைக்கட் டான் கற்ற கல்வி யொருவற், கெழுமையும் ஏமாப்புடைத்து. என்ற திருக்குறளானுணர்க.

"குஞ்சியழகும் கொடுந்தானைக் கோட்
[டழகும்
மஞ்ச ளழகும் அழகல்ல—நெஞ்சத்து
நல்லமயா மென்னும் நடுவு நிலைமையாற்
கல்வி யழகே யழகு"

என்ற நாலடியாரினால் கல்வியழகிலார் எவ்வித உருவமுடையாராயினும் வஸ்திராபரணங்களுடையாராயினும் அது அவர்க்கு அவமதிப்புக்கே காரணமாக அறிவுடையோர் இகழ்வரென்பதும் பெறப்படுகின்றது. "நுண்மாண் நுழைபுல மில்லான் எழினலம், மண்மாண்புனைபாவை யற்று" என்றமையின் கலலாதான் இயற்கையாக மதிநுட்பம் உடையோனாயினும் கல்வியறிவுடையோர் அவர் அறிவினை அங்கீகரியார்' என்பது பெறப்படும். இதுபற்றியே

"கல்லாதான் ஒட்பம் கழிய நன்றாயினும்
கொள்ளார் அறிவுடை யோர்"

என்றனர் போலும்.

கல்வியாகிற சாணையினால் மனிதன் அறிவாகிற மாணிக்கம் நன்கு கடையப்பெறாவிடில் அஃது எத்தனையுயர்ந்ததாயினும் ஒளிவீசிப் பிரகாசிப்பதெங்ஙனம்?

கல்வியாகிற சூரியனின் ஒளி மனிதரின் மனோபுவனத்தினை மூடிக்கொண்டிருக்கும் அறியாமையாகிற இருளை யோட்டி அதனுள் இருக்கும் இயற்கை யறிவினைப் புலப்படுத்துகின்றது. உலகின் இயற்கையமைப்பினையும் நானா விசித்திரங்களையும் உளக்கண்ணால் கண்டு தெளியச் செய்கின்றது.

மனத்தில் எத்துணைக்கவலை மிகுந்திருந்தாலும் அதைமாற்றிக் களிப்பூட்ட வல்ல மருந்தாகின்றது.

பிரபுக்களாலும் அரசர்களாலும் மதித்து வரவேற்றுபசரிக்கச் செய்கின்றது. சோம்பலைத் தவிர்க்கின்றது. உற்சாகத்தை யெழுப்புகின்றது. மூடர்களின் கூட்டுறவைப் பிரிக்கின்றது. பின்னும் நம்பால் இளமையில் இயல்பாய் சில துர்க்குணங்கள் இருப்பினும் அவற்றைப்போக்கி நமது நாவையும் மனத்தையும் பரிசுத்தப்படுத்துகிறது. இனிக் கள்வரால் அபகரிக்கமுடியாத செல்வம் கல்வியன்றி வேறில்லை. கொடுக்கக்குறையும் பொருட்செல்வம் போலாது இறைக்கச் சுரக்கும் கேணி போலத் தம்மையடுத்த பலருக்கும் அறிவுறுத்த அறிவுறுத்தத் தன்னறிவை மேன்மேலும் விருத்தியடையச் செய்கின்றது.

இதனை நீரால் நனைக்க முடியாது. நெருப்பால் எரிக்க முடியாது. காற்றால் அகற்ற முடியாது. மண்ணால் மடிவிக்க முடியாது. ஏனெனின் இதற்கிணையாகவாவது சற்றுக் குறைவாகவாவது எந்தச் செல்வத்தைக் கூறமுடியும்.

சுருங்கக்கூறுமிடத்து உலகில் மாந்தர் அறிவாலநுபவிக்கும் எல்லாவிதமான இன்பங்களிலும் சிறிது துன்பமும் கலந்தே தீபத்திற் சாயைபோல உடனிகழ்வதியற்கை. இது பற்றியே சுகமின்றித் துன்பமுமில்லை, துன்பக்கலப்பின்றிச் சுகமுமில்லை என ஆன்றோர் சாஸனம் செய்துளார். ஆனால் அத்தகைய பொதுவியற்கைக்கு விலக்காகி முழுவின்பமாத்திரமாகவே மனிதர்க்கு வாழ்நாள் முழுமையும் பலவழியாலும் பயன்படுவதாகிய செல்வமும் இக்கல்வியின்றி யில்லை யென்பது உறுதி.

முடிவாய்க்கூறுமிடத்துக் கற்றவர்களே மனிதரில் மனிதராவர். கல்லாதார் மனிதரில் மிருகங்கட்கே சமானமாவர். என்னெனின் பசிக்குப் புசித்தலும்,மனத்தை வசப்படுத்தமுடியாது தவறான செய்கையிற் றலையிடலும் விருப்பும் வெறுப்பும் துயிலும் கோபமும் பசு பட்சி விலங்கினங்கட்கும் இயல்பாயுள்ள குணங்களாகும். இவையே கல்லா மூடர்களிடத்தும் அமைதலின் இருவர்க்கும் வேற்றுமை யிலையென்பது தோன்ற

"விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
கற்றாரோ டேனை யவர்"

என்று அருளிச்செய்தனர். இதனைத்

"தக்க வின்ன தகாதன வின்னவென்
றொக்க வுன்னல ராயின் உயர்ந்துள
மக்களும் விலங்கே மனுவின் நெறி
புக்கவேல் அவ்விலங்கும் புத்தேளிரே"

என்ற கம்பர் செய்யுளும் வலியுறுத்துகின்றது அன்றியும்

"கல்லாவொருவன் குலநலம் பேசுதல்
நெல்லினுட் பிறந்த பதர்போலுமே'

என்ற ஆன்றமொழியானது கல்வியறிவினால் உள்ளம் விசாலித்து அடையவேண்டிய பயன்களை யடைந்தவர் அரிசியமைந்த நெல்லிற்கும் அஃதில்லார் பாலேறப் பெறுமையால் உள்ளீடற்ற பதருக்கும் இணையென்று அறிவிக்கின்றது. பார்வைக்கு இரண்டும் ஒரு தன்மையனவாய் நெல்லாய்க் காணப்படினும் தூற்றுவதினால் அப்பதரைப் பிரித்தொதுக்கி நெல்லையே கொள்வதுபோல் உலகோர் கல்வியறிவு கருத்தமையப் பெறாதவர்களை யொதுக்கிக் கல்வியறிவுடையோரையே முதன்மையாய்க் கொள்வாராகலின்.

உடலை வளர்க்க உணவு எத்துணை அவசியமோ அத்துணை அறிவை வளர்க்கக் கல்வி யவசியமாகின்றது. குலப்பெருமையும் செல்வப் பெருமையும் கல்விப்பெருமைக்குக் கோடியில் ஒரு கூறும் இணையாகின்றதில்லை. இதனைக் 'கடைநிலத்தோராயினும் கற்றுணர்ந்தோரைத் தலைநிலத்து வைக்கப்படும்' என்ற நாலடியாலுணரத்தகும். விரிக்கிற் பெருகும்.

ஐம்புலன்களுள்ளும் சிறந்த கண்களின் பயன் கற்பதொன்றே யென்றும் அப்படிக் கல்வி கற்கப் பயன்படாத கண் முகத்திற் கிளைத்த ஒரு புண்ணென்றும் கல்லார்மனம்புண் படுமென்றும் கருதாது மனத்திற்றைக்குமாறு தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனார்.

"கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத் [திரண்டு
புண்ணுடையர் கல்லாதவர்" என்றருளின

இத்தகைய பெருமை வாய்ந்த கல்வியினைத் தம்மக்கட்கு வற்புறுத்தியும் பயிற்றுவித்தும் அவரை மேன்மைப்படுத்தி மனிதராக்கி இனம் பெருகச் செய்யவேண்டியவர்கள் ஈன்றவர்களே. அவ்வாறு செய்தலைவிடுத்து தரித்திரத்தாலும் அரசராணையாலும் கவருதற்கிடமாய செல்வப்பொருளைச் சேகரித்துவைத்துத் தமது கடமை முடிந்ததாக வெண்ணும் பெற்றோர் அம்மக்கள் அறிவீனத்தால் பின்னர்ச் செய்யும் பெரும் பாதகங்களினாலெய்தும் பாவச்சுமைக்கு முதுகு கொடுக்க வேண்டியவர்களாவா. ரென்பது திண்ணம்.

இதனைத்

"தந்தை மகற்காற்று நன்றி யவையத்து
முந்தி யிருப்பச் செயல்"

என்றருளினமையாலுணர்க. மைந்தரும் அத்தந்தையுவப்பக் கல்வியிற் கவலைகூர்ந்து,

"மகன்றந்தைக் காற்று முதவி யிவன்றந்தை
என்னோற்றான் கொல்லென்னும் சொல்"

என்றதை மனங்கொண்டு தன்னைப்பெற்ற தந்தைக்கு இகழ்வையும் மனமடிவையும் உண்டுபண்ணாது புகழ்ச்சியையும் மகிழ்ச்சியையும் உண்டுபண்ணத் தம்மாலான வரையிலும் முயன்று இத்தகைய விற்பன்னனைப் பெற்ற பிதா எத்துணைத் தவம்புரிந்தானென்று கண்டோர் வியக்கும்படி கற்க வேண்டும். இக்கடமையைநிறைவேற்றாத மைந்தர் தந்தைக்குப்பின் அவர் ஆன்மாவுக்கு நற்பதவி கிடைக்குமென்கிற நம்பிக்கைகொண்டு குலவழக்கம்பற்றியியற்றும் உத்தரக்கிரியைகளும் தானதர்மங்களும் எள்ளளவும் மெச்சத்தகுவனவன்றாம். வடமொழியில் உத்தரம் என்பதே இரண்டாவதென்று பொருள் படுதலின் உத்திரகிரியை என்கிற சொல்லும் இரண்டாம் கடமை யென்று பொருள் படுகின்றது. ஆகவே முதற்கடமை யாவது மேலே கூறிய கல்வியிற் சிறந்து பிதா மாதாக்களைப் பெருமைப்படுத்தலேயாம். மாதாவுக்கும் மகன் கல்விமானாவதில் கவலை மிகுதி யுண்டென்பதை,

"ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன் மகனைச் சான்றோனெனக்கேட்டதாய்" என்ற குறளினாலறிக இதனைவிரிக்கிற் பெருகும். இவைகளன்றியும் ஒருவனுக்கு உலகில்நல்லொழுக்கத்தையும் நன்னடையையும் நற்புகழையும் நற்பதவியையும நனலன்பத்தினையும் தெவிட்டாத திருப்தியையும் அடையும் அவா உண்மையாய் இருப்பின் கல்வியென்னும் சிறந்த கருவியொன்றினாலேயே அவையனைத்தையும் ஒருங்கே பெறலாமென்பது கல்வின்மே லெழுத்தாம்.

---

# ஆசிரியர்களுக்கு

## மகாத்மா உபதேசம்

கூர்ஜர சாகித்திய மகாநாட்டுத் தலைவரான மகாத்மா 'காந்தி தமது முடிவுரையில் பின்வருமாறு கூறினார்:—நான் எழுதப் படிக்கத் தெரியாமல் வாயில்லாப் பூச்சிகளைப் போல இருக்கும் கோடிக்கணக்கான கிராம வாசிகளின் பிரதிநிதியாக இருப்பதாக உரிமை கொண்டாடுகின்றேன். புத்தக ஆசிரியர்களாகிய நீங்கள்கிராமவாசிகள் எளிதில்உணர்ந்து கொள்ளும்படி சுலபமான முறையில் புத்தகங்கள் எழுதவேண்டுமென நான் உங்களைக் கேட்டுக் கொள்ளுகின்றேன். நீங்கள் ஸ்திரீகளைப்பற்றி மிகைபட்ட முறையில் வருணிக்கக்கூடாதென வேண்டிக் கொள்ளுகின்றேன். உங்கள் தாயாகவும் உங்கள் மனைவியாகவும் இருப்பவர்கள் ஸ்திரீகளே என்பதை ஞாபகத்தில் வைத்து உங்கள் புத்தகங்களை எழுதுங்கள்.

நல்ல விஷயங்களைப்பற்றி கிராம வாசிகள் எளிதில் உணர்ந்து கொள்ளும் வண்ணம் தாய் பாஷையில் சுலபமான முறையில் எழுதப்பட்ட முதல் நூல் ஒன்று கூட இல்லாதிருப்பது வருந்தத்தக்கதாகும். எல்லாவற்றையும் அந்நிய பாஷையில் செய்யவேண்டிய நிர்ப்பந்தம் உலகில் துர் அதிர்ஷ்டம் வாய்ந்த இந்தியா ஒன்றில்தான் காணப்படுகிறது. கிராமங்கள் தான் முதல் நூல்களை எழுதுவதற்குத் தகுந்த இடமாகும். கிராமங்கள் தான் அறிவு வளர்ச்சிக்கேற்ற இடமாகும். கிராமங்களுக்கே புத்தகாசிரியர்கள் செல்லவேண்டும்.

* * *

வீடானது அன்பும், சந்தோஷமும், சாந்தமும் நிலவும் இடம். அங்கு நாமும் நம்மை ஆதரிப்போருடனும் இன்பத்தில் மூழ்குகிறோம்.

# ஆரோக்கிய வர்த்தமானங்களும் குறிப்புகளும்.

உருளைக்கிழங்கு.—உருளைக்கிழங்கானது, ஒரு நல்ல ஆகாரப்பதார்த்தமென்று பொடேடோ மார்க்கட்டின் போர்டார் பதிப்பித்துள்ள புஸ்தகத்தால் தெரியவருகிறது. இதில் பிசகில்லை. தானிய வகைகளுடன் இதை ஒத்துப்பார்த்தால், உருளைக்கிழங்கில் ஜலம் அதிகமிருப்பதால், சக்தியை உண்டாக்குவதற்கு இது ஒரு மலிவான வஸ்து என்று ஏற்படுகிறது. இதனுல் இன்னும் அநேக நன்மைகள் இருப்பதால், சக்தியை உண்டுபண்ணுகிற விஷயத்தைமட்டும் எடுத்துக்கொண்டு ஒத்திடக்கூடாது. தானிய வகைகளிலுள்ள ப்ரோடீனைக் காட்டிலும் உயர்ந்ததாயிராவிட்டாலும், உருளைக்கிழங்கிலுள்ள ப்ரோடீன் அதற்குச் சமமாகவேயிருக்கிறது. ஜீவஸத்துப்பொருள், உப்பு இவை உருளைக் கிழங்கில் அதிகம் இருக்கின்றன. உருளைக் கிழங்கில் ஸி. ஜீவஸத்துப்பொருளும், பி. கலப்பு ஜீவஸத்துப்பொருள்களும் இருக்கின்றன. கெரோடீன் என்கிற ஏ. ஜீவஸத்துப்பொருள் அதில் சிறிதளவாயிருந்த போதிலும், மஞ்சள் வர்ணமான கிழங்குகளைப் பொறுக்கி எடுத்து அனுப்பினுல் அதில் இந்த ஜீவஸத்துப் பொருள் அதிகமாக இருக்கும். உருளைக்கிழங்கை உண்டே ஜீவித்து வரும் ஜனங்களுக்குப் பெரிபெரியாவது பெல்லக்ரா என்னும் வியாதியாவது உண்டாகிறதில்லை. பி. கலப்பு ஜீவஸத்துப்பொருள் வேண்டுமான அளவு சப்ளை ஆகியிருக்கிறதென்று இதனுல் ஏற்படுகிறது. அதிலுள்ள ஸி. ஜீவஸத்துப் பொருளே அதன் பலத்த ஆஸ்திகளில் ஒன்ருகும். இது அநேக மாத காலங்கள் அழியாமல் அப்படியே இருக்கும். மாரிக் காலத்தில் சத்தற்ற ஒரேவிதமான ஆகாரம் உண்டவனுக்கு இது முக்கியமான பாது காக்கும் பதார்த்தமாகும். 1917-ம் ஆண்டில் கிரேட் பிரிட்டனில் ஸ்கர்வி என்னும் வியாதி கண்டிருந்தபோது, அதற்கு உருளைக்கிழங்கு குறைவாயிருந்ததே காரணமாக இருந்தது. உருளைக்கிழங்கில் ஆல்கலி சம்மந்தமான சாம்பல் உண்டாகிறது, ஆனதுபற்றி, தானிய வகைகளைக்காட்டிலும் ஆகாரப் பதார்த்தமாக இது மிகச் சிறந்தது. ஏனெனில், ஆகாரத்தில், உப்புக்கள் அதிகமாக உண்டாகும்படியான ஆகாரந்தான் தேவை. சில தானிய வகைகள், கணமாந்தத்தை உண்டு பண்ணக் கூடியதும், ஆரோக்கியமான பற்கள் முளைப்பதற்கு விரோதமாயும் இருக்கின்றன. உருளைக் கிழங்கிற்கு இந்தக் குணம் காணும். இது அதிலுள்ள ஒரு விஷத்தின் குணத்தினுலோ, எந்தக் காரணத்தினுலோ இந்த சக்தி இதற்கு உண்டாயிருப்பது என்பதை நிச்சயமாய்ச் சொல்ல முடியாது. டிரஸ்டான் டி குன்ஹா என்னும் தீவிலுள்ள ஜனங்களின் பற்களைப் பரிசோதித்துப் பார்த்ததில், இதன் குணம் ஆச்சரியப்படத்தக்க நன்மையையுடையதென்று ஏற்பட்டது.

இந்தத்தீவில் மற்ற தானியவகைகளைக் காட்டிலும், இது ஜனங்களுக்கு முக்கியமான ஆகார பதார்த்தம். ஆனதுபற்றி, கிரேட் பிரிட்டனில் தானியங்களின் அளவைக்குறித்து அதற்குப் பர்த்தியாக உருளைக்கிழங்கைச் சந்தேகமின்றி உபயோகிக்கலாம் என்று தோன்றுகிறது.—தி லான்ஸெட்.

மலப்போக்கின் சிகிச்சைக்கு ஆப்பில் பழம் எடுத்தது.—ஜெ. இ. ஹோல்ஸ்டு (யுஜிஸ்கிரிப்டுபர் லீஜர், 6-12-34, பக்கம் 1335) என்பவர் டென்மார்க்கில் தம்முடைய வைத்தியசாலையில் அநேகவிதமான மலப்போக்குகளுக்குச் சிகிச்சைசெய்ய ஆப்பில் பழங்களை விஸ்தாரமாய் உபயோகித்து வருகிருர், சில வருஷங்களுக்கு முன் ஜெர்மனியில் இந்த சிகிச்சையை ஒழுங்காய் நடத்த ஆரம்பித்தது முதல், அநேகவிதமான மாறுதல்கள் அதில் உண்டாக்கப்பட்டன. ஜனங்கள் மெச்சக் கூடிய ஒருவகை உண்டு. அதாவது, பழுத்த உறித்த ஆப்பில் பழங்களை ராவி, 500 முதல் 1500 க்ராம் வரையில் பச்சையாய் ஒரு தடவைக்கு 100 முதல் 300 க்ராம் வரையில் 5 வேளை கொடுத்து வரவேண்டியது. இரண்டு நாட்கள் மட்டும் ஒரே ஒரு ஆகாரந்தான் எடுத்துக்கொள்ள வேண்டியது. நோயாளிக்கு அதிக தாகமெடுத்தால் கொஞ்சம் வலுவற்ற தேயிலைப்பானம் கொடுக்கலாம் சில சமயங்களில் 24 மணி நேரம் சிகிச்சை



செய்தால் போதும். ஆனுல், கிரந்தரமாய் வியாதி தீரவேண்டியதாயிருந்தால், மூன்று அல்லது 4 நாட்கள் வரையில் சிகிச்சைசெய்ய வேண்டும். மலப்போக்கு தீவிரமானதாயிருந்தால் நல்லபலன்கள் உண்டாகும். வியாதி நீடித்ததாயிருந்தாலும், சந்தோஷப்படக்கூடிய பலன் கிடைக்கிறது. இதை எழுதுவோரின் நோயாளிகளில் ஒருவர். அநேக வருஷ காலம் மலப்போக்கால் அவஸ்தைப்பட்டுக்கொண்டு வந்தார். அவருக்கு ஆகாரச் சிகிச்சை நீடித்துச் செய்யவேண்டியிருந்தது. அதனுல் அவரது தேக எடை குறைந்துபோய்விட்டது. ஆப்பில் சிகிச்சையினுல் உடனே கைகூடிவந்து, சில நாட்களுக்கெல்லாம் வழக்கமான ஆகாரம் சாப்பிட ஆரம்பித்தார். நீடித்த வியாதியஸ்தன் அரைவாசி பட்டினி கிடக்கவேண்டியிருப்பதால், ஆப்பில் ஆகாரம் அவனுக்கு ஏடுத்ததாயிருக்கிறது. ஆப்பிலிலுள்ள டானிக் திராவகமானது இதன் சக்திற்குக் காரணம் என்று சொல்லப்படுகிறது. ஆனுல், டானிக் ஆஸிட் திராவகத்தினுல் செய்யப்பட்ட மருந்தை உபயோகிக்கும்போது, இந்த நோயாளிகளுக்கு அந்த வியாதி தீராமலிருப்பதுபற்றி, மேற்சொல்லிய கொள்கைக்கு நியாயம் காணும்.—பிரிட்டிஷ் மெடிகல் ஜர்னல்.

---

ஆரம்ப ஆசிரியர் சம்பளப் பிடித்த ரத்து

தென்னுற்காடு ஜில்லாவிலுள்ள ஆரம்ப ஆசிரியர்களின் சம்பளத்தில் சென்ற ஒரு வருஷகாலமாக ஒரு ரூபாய்க்கு 2 அணு வீதம் பிடித்து வந்தார்கள்.

"சென்ற வருஷத்தில் தற்காலிகமாகத்தென்னுற்காடு ஜில்லாவில் ஆரம்ப ஆசிரியர் சம்பளத்தில் பிடித்தம் செய்ய முற்பட்டாலும் ஒரு கால நிர்ணயம் குறிப்பிடாமலிருப்பதற்கில்லை. தற்காலமுள்ள ஜில்லா போர்டு செல்வநிலையை யோசிக்குங் கால் சம்பளப் பிடித்தத்தை நீக்க இடமே யில்லையாதலால், இந்த ஜில்லாவில் ஏற்படுத்தப்பட்ட 1 ரூபாய்க்கு 3 பைசா படிப்பு வரியை 4½ பைசாவாக உயர்த்தவேண்டும் அது இந்தப் பசலியிலிருந்து அமுலுக்கு வரவேண்டுமென்றும் இப்போது கவர்ன்மெண்டார் உத்தரவு பிறப்பித்திருக்கிருர்கள்.

## மதிப்புரை

விநோதன்;—விநோதனின் ஐந்தாவது ஆண்டின் முதல் இதழ் வரப்பெற்றோம். இவ்விதழில் பல அரிய கட்டுரைகள் காணப்படுகின்றன. தற்கால நாகரிகத்தினுல் ஏற்படுந் தீமைகளும், கல்வி கற்க மேனுடு செல்பவரின் பரிதாப நிலைகளும், உண்மைக் காதலின் உயரிய குணங்களுடன் கூடிய தியாகங்களும் கட்டுரைகளால் போதிக்கப்படுகின்றன. சரீர சௌக்யத்திற்குவேண்டிய அரிய குறிப்புக்களும் கொண்டு இப்பத்திரிகை வெளிவருகிறது. கட்டுரைகள் வெறுங் காமச் சுவை ததும்ப எழுதப்படாமல் சீரிய நேரிய தமிழால் நன்கு வரையப்பட்டிருத்தல் பாராட்டத்தக்கது. உள் நாட்டிற்கு வருட சந்தா ரூ 1—8—0; தனிப் பிரதி விலை அணு 2. வேண்டுவோர், 'விநோதன்' ஆபீஸ், சென்னை என்ற விலாசத்துக்கு எழுதவும்.

'கலியுகம்' என்னும் மாத சஞ்சிகையின் மூன்ருவது வருடத்திய முதல் இதழ் வரப்பெற்ேறாம். இம்மாத வெளியீடு தேகாரோக்கியத்திற்கு வேண்டிய கட்டுரையையும், உலக விஷயக்குறிப்புக்களையும், ஒரு சிறு கதையையும் கொண்டு வெளிவருகிறது. தனிப் பிரதி 3 பை. வருட சந்தா அணு 6. வேண்டுவோர் 'கலியுகம்' ஆபீஸ், ஜி. டி. மதராஸ் என்ற விலாசத்திற்கு எழுதவும்.

மாணவர் உலகம்:—இப் பெயர் கொண்ட மாதப் பத்திரிகையின் முதல் இரண்டு இதழ்கள் வரப்பெற்ேறாம். கல்வி, கைத்தொழில், விவசாயம், வியாபாரம், சுகாதாரம் அறிவாராய்ச்சி முதலிய கட்டுரைகளுடன் இந்தியாவிலும், தென் ஆப்பிரிக்காவிலும் உள்ள தமிழ் மாணவர்களுக்காக இப்பத்திரிகை வெளியிடப்படுகிறது. இதன் ஆசிரியர் தென் ஆப்பிரிக்கா, டர்பானிலுள்ள திரு. இரா. அரசுப்பிள்ளையாவர். இப்பத்திரிகையின் கலம் கருதி இது இந்தியாவிலுள்ள பழனியினின்றும் வெளிவருகிறது. மாதந்தோறும் ஆப்பிரிக்காவிற் கனுப்பக் கூடிய வசதியில்லாததால் இது மூன்று மாதங்களுக்கு ஒரு முறை வெளிவருகிறது. வேண்டுவோர் 'சண்முகானந்த பிரஸ்' பழனி என்ற விலாசத்துக்கு எழுதி விவரம் தெரிந்து கொள்ளவும்.

# லோயர் கிரேடு ஆசிரியர்கள் பசியா வரம் பெற்றவர்களா?

பி. பரிமணப்பல்லவாரயர்

'ஜன நாயகம்' 23-11-36-ன், 6-ம் பக்கத்தில் ஹையர்கிரேடு ஆசிரியர்களின் சம்பளத்தில் ஒரு ரூபாய் வீதம் உயர்த்த இரண்டு லட்சம் ரூபாய் கொடுக்கும்படி போட்டிருந்த திட்டத்தை, சட்டசபை நிதிக் கமிட்டியார் அங்கீகரித்திருப்பதாகத் தெரிகிறது. லோயர்கிரேடு ஆசிரியர்களைப் பற்றிக் குறிப்பிடப் படாததைப் பார்க்கும்போது 20-ரூ சம்பளம் வாங்கும் ஹையர் கிரேடினரை விட, 15-ரூ. சம்பளம் வாங்கும் லோயர் கிரேடினர் குறைந்த சாப்பாடு சாப்பிடுபவர்களா? பசியாவரம் பெற்றவர்களா? என்று யோசிக்க வேண்டியிருக்கிறது. அல்லது இனிமேல் பசியாவரம் பெறப் போகிறார்களா என்று நினைக்க வேண்டியிருக்கிறது. (லோயர் கிரேடு) ஆசிரியர்க்கு மட்டும் பசியாவரம் கிடைப்பதென்றால், ஆசிரியர் தவிர தம் குடும்பத்தினருக்கு ரூ. 15 போதுமெனலாம். பசியாவரம் கிடைத்தால் மட்டும் போதுமா? துணிமணிகள் கிழியாவரமும், குழந்தை குட்டிகள் பிறந்து அதிகச் செலவு ஏற்படா வரமும் ஏற்படுதல் வேண்டுவதும் அவசியமாகும். இந்த வரங்களை இந்தக் காலத்தில் எதிர்பார்ப்பது முயற்கொம்பாகவோ, குதிரைக் கொம்பாகவோதான் காணலாம்.

ஆகவே, லோயர் கிரேடு ஆசிரியர்களும், உயிப் பிராணிகள் தான். பசிக்கும் இயல்பையும், ஆகாரமுண்ணும் அவசியத்தையும், மற்றும் குடும்பப் பொறுப்பு முதலியவற்றையும், ஹையர் கிரேடினரைப் போல் உள்ளவர்கள் தான் என்பதை நினைத்துப் பார்த்து, சர்க்காரின் சட்டசபை நிதிக் கமிட்டியாரும் ஏனையோரும் லோயர் கிரேடு ஆசிரியர்களும் தமது பொறுப்பை—கடமையைச் சரிவரச் செய்ய வேண்டியதற்குப் பொருளாதாரம் அவசியமென்பதை உணர்ந்து, லோயர் கிரேடினருக்கும் ஹையர் கிரேடினருக்கு அங்கீகரித்தது போல் செய்தருளுமாறு வேண்டிக்கொள்ளுகின்றேன்.

'நகர தூதன்' 1-11-36-வெற்றியின் 13-ம் பக்கத்தில் தோழர் பி. கே. ராமச்சந்திர படையாச்சியார் சட்டசபையில் கூறியதைக் குறிப்பிட்டு நாம் தெரிவித்துள்ள மேற்கண்ட அபிப்பிராயம் கமிட்டியாரின் கவனத்துக்கு எட்டியிராதென்றே நினைக்க வேண்டியிருக்கிறது. சட்ட சபைக் கூட்டத்திலாவது சட்டசபை அங்கத்தினர்கள் இதற்குப் பரிகாரம் செய்தருளுவார்களென்றும் எதிர்பார்க்கிறோம்.

* * *

# யிடைவேளைப் போஜனம்!

மாதம் நான்கணு! கவர்ன்மெண்டு பாடசாலை மாணவர்களுக்கு இடைவேளை போஜனம்!; இதுதான் வங்காள கவர்ன்மெண்டார் செய்துள்ள ஏற்பாடு; கவர்ன்மெண்டு நடுத்தர பாடசாலைகளில் இது அநுஷ்டானத்திற்குக் கொண்டுவரப்படும்; நமது மாகாண மாணவர்கள் வாயில் ஜலமூறும்; வங்கத்தில் பிறக்கவில்லையே யென்று அவர்கள் வருந்துவார்கள்; பெற்றோர்களுக்கும் குழந்தைகளை அனுப்பலாமாவென்ற ஆசை தோன்றும்; அவ்வளவு வசீகரமானதன்றோ இந்த ஏற்பாடு? ஆனால் கவர்ன்மெண்டார் தங்களுடைய கடமையையே செய்ய முன்வருகின்றனர், பாடசாலை மாணவர்களில் பலருடைய உடல் நிலை மிகவும் சீர்கேடானதாக இருக்கிறது; ஊட்டம் தரத்தக்க ஆகாரத்தை அவர்களுக்குக் கொடுக்கவேண்டுமென்று உபதேசிக்கப்படுகிறது; பெற்றோர்களிடம் பணமில்லை; அவர்களுடைய ஸத்து முழுவதையும் சம்பளமும் நோட்டுகளும் உறிஞ்சிவிடுகின்றன; தொலைவிலுள்ள பாடசாலைகளுக்குச் செல்லுங்குழந்தைகளுக்கு இடைவேளைப் போஜனத்திற்காகக் கொடுத்தனுப்ப காசுக்கு அவர்கள் என்னசெய்வார்கள்?; கொடுத்து அனுப்பினாலும் ஆரோக்கியமான பொருள் கிடைக்குமென்ற நம்பிக்கைக்கு இடமேது?; எனவே இந்தப் புதிய ஏற்பாடு



வரவேற்கத் தகுந்ததாகும்; குழந்தைகளுடைய உடல் நலத்தைப் பாதுகாக்க இது உதவி செய்யும்; 4 அணுவுக்குள் ஒருமாதத்திற்கு இடைவேளைச்சாப்பாடு கொடுப்பது கஷ்டமாக இருக்கலாம்; ஆனால் மொத்தத்தில் ஏற்பாடு செய்கையில் செலவு குறைவாக இருக்கும்; கொஞ்சம் அதிகப் பணம் செலவிடவேண்டியிருந்தாலும் பாதகமில்லை; அங்கு ஆரம்பிக்கும் பரீட்சை வெற்றிபெறுமென்றும் இதர மாகாணங்களிலும் அவ்விதம் செய்யவேண்டிய அவசியத்தை ஏற்படுத்துமென்றும் எதிர்பார்ப்போம்.

---

## லோக்கல் போர்டு. உத்தியோகஸ்தர்கள் மகாநாடு தஞ்சாவூர். 11-10-36

நிறைவேறிய தீர்மானங்கள்

1. எலிமெண்டரி ஸ்கூல் ஆசிரியர்களுக்கு ஒரு தனியான சம்பள விகிதம் வேண்டும்.
2. இண்டர் மீடியட் ஆசிரியர்களுக்கு ஒரு தனியான சம்பள விகிதம் வேண்டும்.
3. புதிய சம்பளத்திட்டம் பழைய சர்விஸ் மனிதரைப் பாதிக்கக்கூடாது. மேலத் தஞ்சை ஜில்லா போர்டார் எல். டி. ஆசிரியர்களுக்கு வைத்திருக்கும் சம்பளப் பிடித்தம் நீக்கப்படல் வேண்டும்.
4. எலிமெண்டரி ஸ்கூல் தலைமையாசிரியர்களுக்கு அல்லவன்சு கொடுக்கவேண்டும்.
5. ஆரம்பக் கல்வி ஆசிரியர்களுக்கு சீக்கு லீவில் முழுச் சம்பளம் கொடுக்கப்பட வேண்டும்.

* * *

விருதுநகர் உபாத்தியாயினிகள் சங்கத்தின் பொதுக்கூட்டமொன்றில் சென்ற 34-ந் தேதியன்று ராவ்சாகிப் செந்திக் குமாரு மீனாக்ஷி முனிசிபல் பெண்பாடசாலைக் கட்டிடத்தில் ஸ்ரீமதி சிரோன்மணி செல்லையா தலைமையில் ஆசிரியர் வேதமுத்து 'தமிழ்மொழியின் பெருமை' என்பதுபற்றி நீண்டதோர் பிரசங்கம் செய்தார்.

## பெரியகுளம் ரேஞ்சு ஆசிரிய மானேஜர் சங்கம்

---

இச்சங்கத்தின் கூட்டமானது 7-11-36-ந் தேதி சின்னமனூர் சொக்கையா எலிமெண்டரிப் பாடசாலைக் கட்டிடத்தில் உத்தமபாளையம் "பாரதி' ஆசிரியர் திரு ஆர். நாராயணசாமி செட்டியார் தலைமையில் நடந்தது.

தலைவரவர்கள் முன்னுரையில் நமது நாட்டில் ஆசிரியர்களுக்கு தக்க மதிப்புக் கொடுக்கவில்லையென்றும், எல்லோரும் ஒற்றுமையாய்க் கிளர்ச்சி செய்து தங்கள் சுதந்திரத்தைக் காப்பாற்றிக் கொள்ளவேண்டு மென்றும், மேனாட்டினரைப் போல் ஆசிரியர் பதவி உயர்ந்தாலல்லது தக்க ஆசிரியர் நமது நாட்டில் கிடைப்பது அருமையாகு மென்றும், இன்னும் பல விஷயங்களைப்பற்றி தக்க மேற்கோளுடன் எடுத்துச் சொன்னார்.

பின்பு டிப்டி இன்ஸ்பெக்டரவர்கள் மூலமாய் வந்த பல கவர்ன்மெண்டு உத்தரவுகளைச் சங்கத்திற்கு வாசித்துக் காட்டப்பெற்றது.

தனிப்பட்ட உபாத்தியாயர்களின் பாடசாலை நமது மாகாணத்தில் டைரக்டர் மேற்படி பாடசாலைகளை எடுத்து விடத் தீர்மானித்திருக்கும் அபிப்பிராயத்தை எதிர்ப்பதுடன், இந்த ஜில்லா சட்டசபை மெம்பர்களை ஒரு தூதுக் கோஷ்டி கண்டு பேசி அடுத்துவரும் நவம்பர் சட்டசபைக் கூட்டத்தில் இதைப்பற்றி தாவா செய்ய இச்சங்கம் சட்டசபை மெம்பர்களைக் கேட்டுக் கொள்ளவேண்டுமென்று தீர்மானிக்கப்பெற்றது

இச் சங்கத்தின் ஸிலபஸ் கமிட்டியாரால் தயாரிக்கப்பட்ட ஸிலபஸை ஒப்புக்கொண்டு மெம்பர்களுக்கு விநியோகிக்கப்பெற்றது.

சங்கத்திற்கு இலவசமாய் ஸிலபஸ் அச்சிட்டுக் கொடுத்த மதராஸ் தமிழ்க்கடல் ஆபீஸ் புரோப்ரைட்டருக்கு இச்சங்கத்தின் நன்றியைச் செலுத்து[illegible]க்கப்பெற்றது.

கடைசியாக அக்கிராசனர் முடிவுரை கூறி சங்கக் [illegible]ட்டம் கலைந்தது.

S 211, ... 136 ...

# மணித்திரட்டு

பிசகு செய்யாமலிருப்பதைவிட, செய்த பிசகை ஒப்புக் கொள்ளக் கற்றுக்கொள்வதே பெரிய காரியம்.—கார்டினல் டிரெட்ஸ்.

* * *

வாழ்வில் வெறுப்புக் காட்டுகிறவன் அதன் இன்பங்களைச் சுவைக்கத் தவறியவன். ஒரு காரியத்தினால் உத்தேசிக்கும் பலனைவிட உத்தேசிக்காத விளைவு அதிகம் ஏற்பட்டுவிடுகிறது. ஹக்ஸ்லி.

* * *

சந்தர்ப்பங்களைக் காட்டிலும் மனம் பெரியது; கற்பனா சக்தியைச் சரியாகவும் பிடிவாதமாகவும் உபயோகித்தால் சவுகரியமான நிலைமையை ஏற்படுத்திக் கொள்ளலாம்.—ஹாப்ளின்.

* * *

நாளை நம்கையில் இல்லை; அது நமக்கு உண்டா என்பது சந்தேகம். இன்று தான் உங்களுடையதென்று சொல்லிக் கொள்ளலாம்.

* * *

ஆசையைப் பூர்த்தி செய்து வைத்துக்கொள்ளுவது சுலபமானதாக இருக்கும். காலத்தில் அதை ஈடேற்றிக்கொள்ளுவது பெரிய காரியமில்லை. அது கஷ்டமானதாக இருக்கும்போதே முயற்சி செய்யவேண்டும்; ஆகவே மனம் களைத்திருக்கும் போதும் முயற்சி செய்யுங்கள்.

* * *

ஒவ்வொருநாளும் புதிய வாழ்வு எனவே, மொத்த வாழ்வின் சங்கிரஹம் ஒவ்வொரு நாளும் அதுவே எனது முதல் நாள், கடைசி நாள் என்று நினைத்து நான் உழைப்பேன்; அதற்குமேல் நான் ஜீவித்திருக்க மாட்டேன்.- பிஷப்ஹால்.

* * *

சோம்பலானது யுவர்களைக் கெடுத்துவிடுகிறது, நடுத்திர வயதினரை அவமானப்படுத்திவிடுகிறது. யுக்த வயதில் சோம்பேறிகளாக இருந்துவிட்டவர்கள், தங்களுக்கே தீங்கிழைத்துக் கொண்டவர்களாகி விடுவார்கள். பிலோ.

* * *

அன்பும், சந்தோஷமும் கலந்த வாழ்விலும் பெரியதனமில்லை. பெரியமனதும் சந்துஷ்டியுமுள்ளவர்களை அதிகமாக உற்பத்தி செய்யும் தேசமே சிறந்தது. தன்னுடைய கடமைகளைச் சரியாகச் [illegible] உபசாரம் [illegible] பாக்கியசாலி- செய்கி[illegible] ரஸ்கின்.

190346

நெருப்பணைக்கும் குழாயின் உள் குறுக்கு அகலம் $12\frac{1}{2}$ அங்குலம்.

* * *

சூயஸ்கால்வாயைவெட்டுவதத்கு24,150,000 பவுன் செலவாயிற்று.

* * *

யானை தினம் 4 அல்லது 5-மணி நேரத்திற்கு அதிகமாகத் தூங்குவதில்லை.

* * *

உலகில் 5,00,000 மைல் நீளம் ரெயில்பாதைகள் இருக்கின்றன.

* * *

எல்லாப்பிராணிகளிலும் ஆமையே அதிக நாள் உபவாஸ விரதமிருக்கக்கூடியது.

* * *

லண்டனிலுள்ள செயின்ட்பால் மாதாகோயிலுக்குள் ஏககாலத்தில் 26,000 பேர்கள் நிற்கலாம்.

* * *

பதினைன்காவது நூற்றாண்டின் மத்தியிலேயே இங்கிலாந்தில் விளையாடும் சீட்டுகள் உபயோகத்திற்கு வந்தன.

* * *

கிரேக்கர்களுக்கு வெண்ணெய் என்னவென்பது தெரியாது. அதனால் அவர்களுடைய பாஷையில் அதற்கு வார்த்தையில்லை.

* * *

குதிரையில்லா வண்டியை முதல் முதல் ஓயில்ட்கூஸ் என்பவர் 1519-ம் ஆண்டில் உற்பத்திசெய்தார்.

* * *

கிரேட்பிரிட்டனில் எஸ்ஸெக்ஸ், நார்போக், ஸப்போக் இவற்றில்தான் அதிக மழை பெய்வதில்லை.

* * *

தேன் கூடுகளுக்கு விளக்குவைத்து, அவற்றை மின்சார விசையினால் உஷ்ணமாகவைத்துக்கொண்டால், ஒவ்வொரு தேன் கூண்டிலும் 11 பவுண்டு தேன் அதிகமாகக் கிடைக்கும்.

* * *

ஒரு பியானோவைச் செய்வதற்கு மரம், இரும்பு, துணி இவற்றின் துண்டுகள் பதினாயிரம் வேண்டும்.

* * *

மணிக்கு 105 மைல் வேகத்தில் செல்லும் ஆகாயவிமானமானது 105 வருஷங்களில் சூரியனை அடையலாமென்று கணக்கிடப்பட்டிருக்கிறது.


## ஆப்த நண்பன்

நீங்கள் அறியாமையினால் தேக சுகத்தைக் கெடுத்துக்கொண்டு அல்லல்படும் சமயத்தில் உங்களுக்கு ஆப்த நண்பனாக உதவும் எங்களுடைய உலகப் பிரசித்தி பெற்ற

ஆதங்க நிக்ரஹ மாத்திரை

களை உபயோகித்தீர்களா? இல்லையேல் உபயோகித்து உடனே தேக அசதி, மலச்சிக்கல் நரம்புகளின் தளர்ச்சி, பசியின்மை, ஞாபக குறைவு, தாது புஷ்டியின்மை முதலிய வியாதிகளை நிவர்த்தி செய்துக் கொள்ளுங்கள். 32 மாத்திரைகள் அடங்கிய டப்பி 1-க்கு ரூ. 1-0-0

இனம்! காம சாஸ்திரம் இனம்!-!

விலாசத்தை தெரிவியுங்கள்.

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,

26, பிராட்வே, : : : : மதராஸ்



## ஹரிதாசர் கைகண்ட அவிழ்தங்கள்

1\. "கக்வா" — கக்குவானுக்கு மிகவும் கைக்கண்டது; ரிஜிஸ்டர் செய்யப்பட்டது இந்த வியாதிக்கு உலகத்தில் சகல மருந்துகளிலும் இதுவே மிகவும் மேலானது உபயோகித்துப் பார்த்தவர்கள் விளம்பரம் செய்கிறார்கள். .... புட்டி ரூ. 1. 3 புட்டி வாங்கினால் தபால் சார்ஜ் இனம்

2\. கலோரோ சாலினால் — இதுவே ஹரிதாசர் காலரா துளி மருந்து; தவறினதேகிடையாது; அபூர்வமான மருந்து 30—35 வருஷ அனுபவம். வாந்தி, காலரா' பேதி வயிற்றுநோய், இவைகள் விரைவில் நீங்கும். புட்டி ரூபா 1 4 0

3\. என்னைத் தைலம். — ஸ்நானத்திற்கு உபயோகித்தால் சகல விதகண் நோய்களும் நீங்கி சிரசு குளிர்ச்சியாய் கண்களிற்கு ஒளி உண்டாகும். ராஜ உறுப்புகளிலுள்ள மேகச்சூடு நீங்கும். புட்டி விலை பா 1 4 0

மருந்து காட்லாக் இனம்.

வாத்திமார்களுக்கும் வைத்தியர்களுக்கு மாத்திரம் ரூ 5, மருந்திற்கு குறையாமல் ஆர்டர் அனுப்பினால் ரூ 1 தள்ளிகொடுக்கப்படும்.

ஆஸ்தமா நீரிழிவு முதலிய வியாதிகளுக்கு கை கண்ட மருந்துகள், விபரம் காட்லாக் இவைகளுக்கு விலாசம்

DR. H. தேவதாசர் B. A. L. T. M. T. Sc.

தாசர் சித்த வைத்தியசாலை,

தின்னனூர், [illegible]

Register M. 3671

# பாடசாலைக்கு வேண்டிய

## எக்ஸர்ஸைஸ் புத்தகங்களின் விலை ஜாபிதா

| | 40 பக்கம் குரோஸ் 1-க்கு ரூ. அ. பை. | 60 பக்கம் குரோஸ் 1-க்கு ரூ. அ. பை. | 80 பக்கம் குரோஸ் 1-க்கு ரூ. அ. பை. | 120 பக்கம் 1 குரோஸ் ரூ. அ. |
|---|---|---|---|---|
| **6 பவுன் மட்ட பேப்பர்** | | | | |
| ரூல் போட்டது & இரட்டை ரூல் ,, | 1 13 0 | 2 11 0 | 3 8 0 | 5 0 |
| **6 பவுன் கல்கத்தா பேப்பர்** | | | | |
| ரூல் போட்டது & இரட்டை ரூல் | 2 12 0 | 3 15 0 | 5 1 0 | 7 8 |
| **8 பவுன் கல்கத்தா பேப்பர்** | | | | |
| ரூல் போட்டது & இரட்டை ரூல் | 3 5 0 | 4 11 0 | 6 0 0 | 8 15 |
| ரூல் போடாதது .... | 3 2 0 | 4 6 0 | 5 11 0 | 8 5 |
| ரூலும் மார்ஜினும் .... | 3 8 0 | 5 0 0 | 6 8 0 | 9 8 |
| ஒரு பக்கம் ரூல் .... | 3 10 0 | 5 2 0 | 6 10 0 | 9 8 |
| ரூலும் கலர் அட்டையும் .... | 3 14 0 | 5 4 0 | 6 10 0 | 9 12 |
| ஒரு பக்கம் ரூலும் கலர் அட்டையும் | 4 4 0 | 5 13 0 | 7 6 0 | 10 10 |
| **9 பவுன் கல்கத்தா பேப்பர்** | | | | |
| ரூல் போட்டது .... | 3 10 0 | 5 2 0 | 6 10 0 | 9 12 |
| ரூலும் மார்ஜினும் .... | 3 13 0 | 5 7 0 | 7 0 0 | 10 5 |
| **10 பவுன் கல்கத்தா பேப்பர்** | | | | |
| ரூல் போட்டது & இரட்டை ரூல் | 3 15 0 | 5 10 0 | 7 5 0 | 10 12 |
| ரூலும் மார்ஜினும் .... | 4 2 0 | 5 15 0 | 7 11 0 | 11 6 |
| ஒரு பக்கம் ரூல் .... | 4 5 0 | 6 3 0 | 8 4 0 | 11 14 |
| ரூலும் கலிகோ அட்டையும் .... | 5 3 0 | 6 13 0 | 8 8 0 | 11 15 |
| ஒரு பக்கம் ரூலும் மார்ஜினும் கலிகோ அட்டையும் | 5 7 0 | 7 4 0 | 9 2 0 | 12 13 |

# STUDENTS' NOTE BOOKS

| | Dozen No. 2 | Dozen No. 3. | Dozen No. 4. | Dozen. No. 5. | Dozen No. 6. |
|---|---|---|---|---|---|
| 8. Pounds Ruled & Methamatics | 1 3 0 | 1 9 0 | 1 15 0 | 2 5 0 | 2 11 0 |
| ,, Unruled Margin | 1 3 0 | 1 9 0 | 1 15 0 | 2 5 0 | 2 11 0 |
| ,, Uuruled | 1 2 6 | 1 8 0 | 1 14 0 | 2 3 0 | 2 8 0 |
| ,, Ruled & Margin | 1 4 6 | 1 11 0 | 2 1 0 | 2 7 0 | 2 13 6 |
| ,, One Side Ruled | 1 5 0 | 1 12 0 | 2 2 0 | 2 8 0 | 2 14 0 |
| 0. Pounds Ruled & Methamatics | 1 6 6 | 1 13 6 | 2 4 6 | 2 12 0 | 3 3 0 |
| ,, Unruled | 1 5 6 | 1 12 0 | 2 3 0 | 2 9 6 | 3 0 0 |
| ,, One Side Ruled | 1 8 0 | 1 15 0 | 2 7 0 | 2 15 0 | 3 7 0 |
| ,, Ruled & Margin | 1 7 0 | 1 14 6 | 2 6 6 | 2 14 0 | 3 0 |


ஸன். முருகேச முதலியார் அண்ட் ஸன்

டிராயிங், கிராப், கோட்புக், அகௌண்ட் புத்தகம் தயாரிப்பவர்கள்

54-55 பத்ரையன் தெரு ஜி. டி. மதராஸ்,



பி. வீரராகவன் அவர்களால், சென்னை, மண்ணடி, புதுத்தெரு, நெ. 94'95, இல்லத்தில் அஸோஸியேஷன் பிரஸ்ஸில் அச்சிட்டு